|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 12 சோபகிருது வரு வைகாசி - ஆனி மீ ஜுன் 2023 இதழ் 6





ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## வைகாசி – ஆனி

மலர் 12 ஜூன் – 2023 இதழ் 6

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| முகாம் நிகழ்ச்சிகள் | 18 |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 22 |
| ராஜ தரங்கிணி | 23 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 26 |
| குரு பாதுகா பஞ்சரத்னம் | 30 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 32 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 33 |
| தொல்காப்பியத்தில் அத்வைதம் | 34 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| புராணக் கதை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| சிவமானஸிக பூஜை | 47 |



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


### நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்






# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீT.N. ராமசந்திரன்
ஸ்ரீT.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

*பஞ்ச பூதங்களுக்கு அதிபதி அக்னி தேவன். அவர் என்னைக் காப்பாற்றட்டும். ஞான வ்ருத்தியும், ஐஸ்வர்ய வ்ருத்தியுமானதும், மங்களகரமானதும் இப்போது செய்யப்படுவதும், தேவர்களைக் கூவி அழைப்பதுமான இந்த கார்யத்தில் அக்னிக்கு இந்த ஆகுதி அளிக்கப்பட்டதாகட்டும். இது அக்னிக்கே எனதன்று.*

*முதியோர்களின் அதிபதி இந்த்ரன். அவர் என்னைக் காப்பாற்றட்டும்... இது இந்த்ரனுக்கே எமதன்று. பூமிக்கு அதிபதி எமன். அவர் என்னைக் காப்பாற்றட்டும்.....*

*அந்தரிக்ஷத்திற்கு அதிபதி வாயு. அவர் என்னைக் காப்பாற்றட்டும்.... ஸ்வர்கத்திற்கு அதிபதி ஸூர்யன் அவர் என்னைக் காப்பாற்றட்டும்.... சந்த்ரன் தாரா கணங்களுக்கு அதிபதி அவர் என்னைக் காப்பாற்றட்டும்... வேதத்திற்கு ப்ருஹஸ்பதி அதிபதி அவர் என்னைக் காப்பாற்றட்டும்.... ஸத்ய வசனத்திற்கு மித்ரன் அதிபதி. அவர் என்னைக் காப்பாற்றட்டும்.*

*ஜலத்திற்கு வருணன் அதிபதி. அவர் என்னைக் காப்பாற்றட்டும். ஆறுகளுக்கு ஸமுத்ரம் அதிபதி. அவர் என்னைக் காப்பாற்றட்டும்...*

*அதர்வண வேதம் 5ஆம் காண்டம்*
*111 யஜுர் வேத ஜயாதி ஹோமம்]*

*கௌஸ்துப ரத்னமணிந்த மதுவை வென்ற நாரணனின் மார்பில் எது இந்த்ர நீல கற்களாலாகிய மாலை வரிசை போல் விளங்குகிறதோ ஷாட்குண்யம் நிரம்பிய கடவுளுக்கும் எது அனு ராகத்தை அளிக்க வல்ல தாமரையில் வீற்றிருக்கும் தேவியின் அந்த கடாக்ஷ மாலை எனக்கு ஸர்வ மங்களங்களையும் அளிக்கட்டும். கைடபாஸுரனை வதைத்த எம்பெருமானின் நீருண்ட மேகக்கூட்டம் போன்ற அழகிய மார்பில் நீர் நிரம்பிய மேகத்தில் மின்னற்கொடி போல் எது ஒளிர்கிறதோ உலகுக்கெல்லாம் அன்னையான பார்கவரது பெண்ணான மகத்தான மூர்த்தி எனக்கு மங்களங்களை அளிக்கட்டும்.*

*எந்த தேவியின் தயை நிறைந்த பார்வையால் யாகம் முதலியவைகளைச் செய்யாத மனதுடையவர்களும் மூவுலகிற்கும் அதிபதியாக ஆகிறார்களோ அந்த மலர்ந்த தாமரையில் ப்ரகாசிக்கின்ற ஸ்ரீ தேவியின் பார்வை எனக்கு விரும்பப்படும் தன தான்ய புத்ரன் முதலான ஸம்பத்துக்களின் நிறைவை செய்யட்டும்.*

*ஸ்ரீ சங்கரர் கனகதாரா ஸ்தவம்*

## வாசகர்களுக்கு ஒரு தகவல்

தற்போது மே மாதம் 28.5.2023 ஞாயிற்றுக்கிழமை

அன்று நடைபெற்ற

"**செங்கோல் வைபவம்**" பற்றிய விவரங்கள்

ஆகஸ்ட் 2020 ஆம் வருடம் ப்ரதீப இதழில்

ஆசிரியர் பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். படித்துப் பார்க்கவும்.

இந்த சிறப்பை முன் கூட்டியே தந்ததற்குப் பெருமை கொள்கிறோம்.

**(ஆசிரியர்)**

# ஆசிரியர் பக்கம்

நம் சனாதன மதத்தின் ஆணி வேர் கர்ம ஸித்தாந்தம். இதை எல்லோரும் அறிவர். சாஸ்த்ரப் பயிற்சி உடையவர் ஒத்துக் கொள்வர். பயிற்சி இல்லாதவர் மறுப்புத் தெரிவிப்பர். இது இயற்கை. கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் முழு உண்மையும் புலப்படும். பாபகர்மாக்களை செய்பவன் நரகம் போவான். புண்ய கர்மாக்களைச் செய்பவன் ஸ்வர்கம் போவான். பாபிகள் நரகத்தில் அனேக விதமான சித்ரவதைகளை அனுபவிப்பர். உலகில் மக்கள் படும் துன்பத்தைப் பார்த்து இறைவனை பலரும் நிந்திப்பர். துன்பத்தைத் தரும் கடவுள் வேண்டாம் என்றும் கூறுவர். இந்த விஷயத்தில் மற்ற மதங்கள் சரியான பதிலைத் தருவதில்லை. நமது ஸனாதன மதம் மட்டுமே அவனவன் கர்மாதான் அவனுக்குப் பலனை அளிக்கிறது. **கர்ம பல தாதாவாக** இறைவன் இருக்கிறான் என்று சரியான பதிலைத் தரும். இதன் தொடர்பாக ஒரு விஷயத்தைப் பார்ப்போம்.

ஆப்ரிக்க நாடுகளில் பல (உகாண்டா, சோமாலியா, நைஜீரியா, சூடான்) இன்றளவில் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. பொருளாதார வீழ்ச்சி, சுகாதார அவலம் வ்யாதிகளின் இருப்பிடம், கொலை, கொள்ளை இப்படி பல விதமான அவலங்கள் நிறைந்ததாக உள்ளன. இருப்பினும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வளர்ந்த நாடுகள் அவைகளைக் கண்டுகொள்வதேயில்லை. மனித நேயம் காட்டப்படாத நாடுகள் இவை. அனேகமாக நாம் எல்லோரும் அங்கு வாழ்மக்களைப் பார்த்திருப்போம். கடவுள் படைப்பில் ஏன் இந்த அவலம்? பல நெடுங்காலமாக இதே நிலைதான் பரிதாபம். இதையும் நம் கர்ம ஸித்தாந்ததையும் இணைக்கும் விதமாக ஒரு வேத பாகம் இருக்கிறது. அதில் கூறப்படுவது....

''ப்ரம்மவித்தான மகரிஷியே! எமன் எவ்விடத்தில் பாபம் செய்பவர்களை கஷ்டப்படுத்துவானோ அவ்விடங்களை எமக்குச் சொல்வீராக. கஸ்யபரிடமிருந்து உண்டான ஸௌர்யர்கள் பூலோகம், த்யுலோகம், மத்ய லோகம் இவ்விடங்களில் பாபிகளை கொல்கின்றனர். ஸொர்யர்களால் பிழைக்கப்பட்டு மீண்டும் அந்த நரகத்திலேயே தள்ளப்படுகின்றனர். அந்த பாபிகள் பாப கர்மாவிற்குத் தகுந்தாற்போல் கால், கை இல்லாதவர்களாயும், கேசம் இல்லாதவர்களாயும் புழு, பூச்சி

போன்றவைகளாயும் பிறக்கின்றனர். இறந்து மீண்டும் அதே நரகத்தில் அதே நிலையை அடைகின்றனர். இதன் பின் அதே ஸூர்யனால் சுத்தர்களாகிறார்கள்''

(தைத்ரீய அரண்யகம் முதல் ப்ரஸ்னம்)

நாம் பார்க்கும் உலகிலேயே நம் அருகிலேயே இப்படிப்பட்டவர்கள் உள்ளனர். அவர்கள் பிறப்பு ஏன் அங்கு நிகழ வேண்டும்? அந்நாடுகளும் ஏன் அப்படியே வறுமைப் பிடியில் இருக்க வேண்டும்? கவலைக்குரிய விஷயம். வாசகர்கள் இதையும் ஆப்ரிக்க நாடுகளையும் ஒப்பிடவும். நாம் சொல்ல வந்தது புரியும். நரகம் எங்கோ இல்லை. இங்கேயே நம் அருகிலேயே இருக்கிறது. கர்ம ஸித்தாந்தம் சிரிக்கிறது. பொதுவாக தர்ம சாஸ்த்ரங்கள் கூறும் பலன்கள் உடனே நடப்பதில்லை. ஏதோ ஒரு ஜன்மத்தில் நடக்கும். பிறந்தபின் நடக்கும் கஷ்டங்களை பூர்வ ஜன்ம பலன் என்று ஊகித்து அறிய வேண்டிய நிலை. இங்கே நாம் காண்பது த்ருஷ்ட பலனே. வளர்ந்த நாடுகள் இருப்பினும் வளம் கொழிக்கும் நாடுகளாக இருப்பினும் ஏன் இந்த அவல நிலை? யோசிக்க வேண்டியுள்ளது.


வேதம் கூறும் உண்மை. மறுக்க முடியாதது. அவர்கள் படும் துன்பத்தைத் துடைக்கவும் நாம் பாடுபடவேண்டும். உண்மை. ஆனால் அதுவே பெரும் பாடாக உள்ளது. இதைப் பார்த்தாவது மக்கள் பாபம் செய்யாதிருக்க முயல வேண்டும். புண்யம் செய்ய வேண்டுமென்றில்லை. பாபத்தைத் தவிர்க்க வேண்டும். முயலுமா? ஆண்டவனுக்கே வெளிச்சம் கர்ம சித்தாந்தம் எவ்வளவு திடமானது என்று காட்டவே இதை எழுதினோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணர் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!

Á s k ì ÷uõzµ®

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**

# சில உதாரண புருஷர் போதும்



தனியாக ஒரு பழத்தை எடுத்தால் இப்படி... பூவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பழுக்க வேண்டும் என்பது தனி மநுஷ்யன் விஷயம். ஸமூஹம் என்று எடுத்துக் கொண்டால் அதிலே எங்கேயோ அபூர்வமாக ஒரு சில மநுஷ்யர்கள் தான் இப்படிப் பழுக்கிறார்கள். இதற்காகவும் குறைப்பட வேண்டாம். ஸமூஹத்தை ஒரு மரம் என்று வைத்துக் கொண்டால் ஒரு மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றன?

ஸீஸனுக்கு ஸீஸன் எத்தனை ஆயிரம் இலையும் பூவும் உதிர்ந்து கொண்டிருக்கின்றன? விழுகிற பூக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பூ விழுந்த பின் உண்டாகிற பிஞ்சுகள் கொஞ்சந் தான். அந்தப் பிஞ்சுகளிலும் வெம்பி விழாமல் கடைசி ஸ்டேஜ்வரை பக்வமாகிக் கொண்டே போய்ப் பழுத்த பழமாகிறவை ரொம்பவும் ஸ்வல்பம்தான். இயற்கையில் இப்படித்தான் இருக்கிறது. ஜீவ ஸ்ருஷ்டியிலும் ஏராளமானவர் இலையாயும் பூவாயும் சருகாய், வாடலாய்க் கருதி விழுந்து, காயிலும் ஏராளமானவை வெம்பி விழுந்தும், பக்ஷிகளும் குரங்குகளும் கடித்து விழுந்தும், முடிவாக மிஞ்சும் கொஞ்சமே பழமானாலும் போதும்; அதுவே ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம் என்றுதான் பகவான் லீலை பண்ணிக்கொண்டிருக்கிறான்.

ஜன ஸமுதாயத்தில் அடங்கிய எல்லோரும் நிறைந்த நிறைவாக ஆகி பூர்ணத்வம் அடையாவிட்டால் பரவாயில்லை; மரத்துக்குப் பழம் மாதிரி, ஜனத்தொகையில் எவரோ ஒருத்தர், ஆயிரத்தில் லக்ஷத்தில் ஒருத்தர் பூர்ணமாகி விட்டால் கூடபோதும்; அப்படி ஒரு ஆத்மா நிறைகிறதற்குத் தான் இத்தனை பேர் ஸ்ருஷ்டியாகி, இத்தனை காமக்ரோதாதிகளில் மாட்டிக்கொண்டு தவிக்கிறதெல்லாம். அத்தனாம் பெரிய ஸமுத்ரத்தைக் கடைந்து ஒரு சின்னக் கலசம் அம்ருதம் எடுத்தது போல் இவ்வளவு ஜீவ கோடிகளுள்ள ஸம்ஸாரத்தை கடைவதிலிருந்து அம்ருத தத்வமாக ஆன உதாரண புருஷர்கள் ஸ்வல்பம் உண்டானாலும் போதும். பவக்கடலைக் கடைந்து அதன் ஸாரமாக

ஸ்வல்ப அளவு அம்ருதத்தை எடுக்க உதவுகிற மத்தாகத்தான் ஆசார்யாள் இங்கே பகவானை நினைத்து **பவஜலதி மதன மந்தர** என்கிறார். அப்படிச் சொல்வதால், இந்த ஸம்ஸாரத்துக்குள்ளேயே விஷம் மட்டுமில்லாமல் அம்ருதமும் இருக்கிறது என்று நமக்கு ஆறுதல் உண்டாக்குகிறாற் போலிருக்கிறது. மத்தைப் போட்டுக் கடைந்த உடனே வெண்ணெய் வந்து விடுமா? எத்தனையோ நாழி சிலுப்பினால்தான் வரும் அதுவரை அவஸரப்படக்கூடாது, ஆத்திரப்படக் கூடாது நம்பிக்கை இழக்கக் கூடாது.

நிதானமாக, படிப்படியாக அபிவ்ருத்தி எவருக்கும் உண்டு. ஆகவே நாம் செய்ய வேண்டியதெல்லாம், அந்த மத்து கயிற்றிலிருந்து நழுவி விடாமல் பார்த்து கொள்ள வேண்டியதுதான். என்ன கயிறு? பக்தி என்கிற கயிறுதான். 'சிவாநந்த லஹரி'யில் ஆசார்யாள் பரமேச்வரனிடம் 'பக்திக் கயிற்றால் என் மனக்குரங்கை நன்றாகக் கட் போடு**(த்ருடம் பக்த்யா பத்த்வா)** என்று சொல்லியிருக்கிறார். நாம் பக்திக் கயிற்றால் பகவான் என்ற மத்தை சுற்றி, பிடிப்பை நழுவ விடாமலிருந்தால் அவர் இந்த ஸம்ஸார ஸாகரத்தைக் கடைந்து முதலில் விஷங்களைத் திரட்டி அப்புறப்படுத்திவிட்டுப் பிறகு நமக்கு அம்ருதம் எடுத்துக் கொடுத்து விடுவார். அதாவது அமர நிலையான மோக்ஷத்தைக் கொடுத்து விடுவார்.

பிறப்பு- இறப்பு ஜனன - மரணம் தான் ஸம்ஸாரம். அம்ருதம் என்றால் இறப்பில்லாதது. இறப்பேயில்லை என்றால் அப்புறம் மறு பிறப்பு இல்லை. அப்படிப்பட்ட சாச்வதமான மோக்ஷானந்தமான அம்ருதத்தை இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்தே பக்தியின் துணை கொண்டு பகவத்நுக்ரஹத்தால் பெறவேண்டும் என்பது தாத்பர்யம்.

ஸம்ஸார ஸாகரத்தை விட்டுக் கடத்துவிப்பது என்றால் லோகத்தை அப்படியே துறந்துவிடச் செய்வது. ஸம்ஸாரத்தைக் கடைந்து அம்ருதம் பெறுவது என்றால், அதை விட்டுப் போகாமல், எல்லாவற்றிலும் உள்ள எல்லாமுமான ப்ரஹ்மம் லோகத்திலும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு இஹத்திலேயே பரத்தைப் பெறுவது-என்றிப்படி அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். ஞானமாகவே போனால் வைராக்யத்தில் ஸம்ஸாரத்தைத் துறந்து அதைக் கடப்பது; பக்தியாகப் போனால், அவன் க்ருபையிலுள்ள நம்பிக்கையால் ஸம்ஸாரத்தை விட்டுப் போகாமலே இதிலேயே அவனுடைய அம்ருத தத்வத்தைக் கடைந்து பெறுவது என்று வேண்டுமானாலும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

ஷட்பதீயை ஸம்ஸாரத்திலிருந்து கடப்பதில் ஆரம்பித்து **தாராய ஸஸோர ஸாகரத** என்று முதல் ஸ்லோகத்தில் ஆரம்பித்து கடைவதில் முடிக்கிறதால் எதையுமே விடாமல், ஒதுக்காமல், எதிலும் ஆத்ம த்வத்தை அறிகிற பெரிய விசாலமான நிறைவில் முடிப்பதாக ஆகிறது.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சிறப்பு அருளுரைகள்


குழந்தையிலிருந்து பக்தி வந்தால்தான் நல்லது. குழந்தையிலிருந்து வராவிட்டால் பின்னாளில் பக்தி வராது. சின்ன வயதிலிருந்தே வைதீக சனாதன இந்து தர்மத்திலே எப்படி நாம் சாமி எல்லாம் கும்பிடுவோமோ, வழிபாடு செய்வோமோ, விநாயகர் முதல் ஆஞ்சநேயர் வரை எந்தவித மாறுபாடும் இல்லாமல் வணங்குவோமோ, அப்படி எல்லா உருவத்தின் மீதும் எல்லாச் சாமி மீதும் அதன் புராணக் குணங்களைச் சொல்லி அனுக்கிரகங்களையும் சொல்லிப் பாடுவோம்.

அதன் குணாதிசயங்களை இப்படிப் பாடி, இது தான் 'பரமாத்மா' என்று விநாயகரையும், முருகனையும் கூடப் பாடலாம் என்று கூறிவிட்டார்.

அப்படி என்றால் அத்தனை பரமாத்மாக்கள் இருக்கிறதா? கிடையாது.

ஒரே பரமாத்மாதான் இத்தனை வடிவத்திலே இருந்து அருள்பாலித்து வருகிறது என்று சொன்னார் அவர்.

பட்சணங்கள் ஏராளமாகப் பண்ணி வைத்திருப்பார்கள். பார்த்தால் பல



தினுசாய் இருக்கும். பல வடிவங்களாக இருக்கும். அத்தனை பட்சணங்கள் இருந்தாலும் சாப்பிடும் போது எல்லாம் ஒரே மாவும் சர்க்கரையும்தான்.

பெயர் வடிவங்கள்தான் மாறுகிறது. அதேபோல சுவாமி எத்தனை வடிவத்தோடு இருந்தாலும், எத்தனை அனுக்கிரகத்தோடு இருந்தாலும் ஒரே சக்திதான் ஒரே பரமாத்மாத்தான்.

இங்கே மின்சாரம் நமக்கு- லைட்டு, ஃபேன், மைக் என்று பல வழிகளில் உபயோகமாக இருந்தாலும் உள்ளே இருந்து இயக்கும் சக்தி ஒரே சக்திதான், அது

மின்சக்தி. அது மாதிரி அந்த ஒரே பரமாத்மாதான் எல்லோரிடமும் உள்ளிருந்து ஊடுருவி எல்லோரையும் ஆட்டிப் படைக்கிறது.

தன்னுடைய மாயா சக்தியை வைத்துக் கொண்டு ஈஸ்வரன்தான் இத்தனையையும் ஆட்டிப் படைக்கிறார். அந்த மாயா சக்தி நிஜமா பொய்யா? என்றால் 'யாமா', 'ஷாமா' என்பது போல எது இல்லையோ அதுதான் மாயை. இருப்பது மாயை அல்ல!

அப்படியென்றால் இந்த உலகம் எல்லாம் தென்படக் கூடியது, நிஜமாக இருக்கிறதா இல்லையா என்றால் நிஜமாக நமக்குத் தென்படவில்லை!

இப்போது பார்க்கும் போது நிஜமாக இருக்கிறது. ஆனால் தூங்கும் போது இந்த உலகம் எதுவும் தெரிவது இல்லை. கனவு காண்கிறோம். கனவில் இந்த உலகத்தைப் பார்க்கவில்லை. வேறு உலகத்தைத் தான் கனவில் பார்க்கிறோம்.

விழித்திருக்கும் போது பார்க்கும் உலகம் நிச்சயமா? கனவு காணும் போது பார்க்கும் உலகம் நிச்சயமா? இல்லை. எதுவுமே தெரியாமல் தூங்கும் போது உலகமே இல்லை என்ற ஒரு நிலையில் இருக்கிறோம்.

அப்படி என்றால் நாம் தூங்கும் சமயத்தில் உலகமே இல்லாமல் போய்விடுகிறதா? இதெல்லாம் நல்ல புத்திசாலிகள் யூகிக்க வேண்டிய விஷயம்.

சாமான்ய ஜனங்கள் விடியும்போது எழுந்திருக்கிறோம். காலைக் கடன்களை முடித்துவிட்டு வேலைக்கு ஓடுகிறோம். திரும்புகிறோம். டி.வி. பார்க்கிறோம். சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்கிறோம்.

ஸ்தோத்திரம் மூலமாகவாவது குழந்தைகளுக்கு உயர்ந்த கருத்துக்களைச் சொல்லி வருகிறோம்.

உன்னிடத்திலே என்னிடத்திலே- மற்றவர்களிடத்திலே எல்லோரிடத்திலேயும் உள்ளே இருந்து எல்லோரையும் இயக்கி வைக்கக்கூடியது ஒரே சக்தி தான்.

ஆத்ம சக்தி எனப்படும் ஆத்மா தான் அது. அது எல்லோரிடத்திலுமே இருப்பதால், வேற்றுமை கொண்டு சண்டை போடாமல், திருடாமல், பொய் சொல்லாமல் இரு...

இன்றைக்குத் தப்பு செய்யாதே, அடிக்காதே, உதைக்காதே, பொய் பேசாதே, துரோகம் செய்யாதே, தீங்கு பண்ணாதே என்று சொல்கிறோம். இந்த அனைத்துக்கும் காரணம் நமது வேதாந்தம். அதுதான் அடிப்படை, அதுதான் மூலம்.

அந்த வேதாந்தப்படி எப்போது வாழ்க்கை நடத்துகிறோமோ அப்போது சண்டைகள் இருக்காது, அடிதடி இருக்காது, திருட்டு

இருக்காது, பொய் இருக்காது, கொலை, கொள்ளையும் இருக்காது.

எப்படி தேசிய வாதம் என்றால் மனிதனுக்கு மனிதன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்களோ, அப்படி மனிதன் மனிதனாக வாழ்வதற்கே வேதாந்தம் தேவைப்படுகிறது.

அவ்வளவு தூரம், நமக்கு உபகாரங்கள் செய்வது வேதாந்த விஷயங்கள்தான். அத்தனையும் சொன்னவர் ஆதிசங்கரர்.

நாம் இவ்வளவு செய்தால் மட்டும் போதாது. இதற்கு மேலும் ஒன்று செய்ய வேண்டும்.

நீங்கள் என்னென்ன வேலைகள் செய்கிறீர்கள். சாப்பிடுவது, தூங்குவது, வேலைக்குப் போவது என்று நீங்கள் தினமும் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் ஒரு காரணம் இருக்கிறது.

இத்தனை வேலைகளை செய்வதற்கும் எது காரணமாக இருக்கிறதோ அதைப் பார் என்றார்கள். அதுதான் ஆத்மா! அதுதான் உன்னை ஆட்டி வைக்கும். ஆத்மாவை, ஆத்ம தரிசனம் பண்ணு வதற்காக நீ இத்தனையும் செய்ய வேண்டும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும் என்பார்கள். அது பழமொழி. சுவர் இல்லாவிட்டால் சித்திரம் தீட்ட முடியாது.

அதுபோல ஒரு ஃபிரேம் இருந்தால்தான் கண்ணாடி வைக்க முடியும். ஒரு தாள் இருந்தால் தானே எழுத முடியும்? அதுபோல சரீரம், மனசு, புத்தி, இவை எல்லாம் இருந்தால்தான் வேதாந்தத்தைப் பற்றி விவரிக்க முடியும்.

அதற்கு இத்தனையும் வேண்டும்.

இத்தனையும் வேண்டும் என்றால் அதற்காக பாடுபடணும், சம்பாதிக்கணும், சாப்பிடணும்... இத்தனையும் வேண்டும். ஆனால் இன்றைக்கு எது வேண்டுமோ அது போயே போய்விட்டது. சுவர் இருக்கிறது. ஆனால் அதற்கு மேல் சித்திரத்தைக் காணோம்.

அந்தக் காலத்தில் சுவர் எதற்காக வைத்தான் என்றால் அதில் சித்திரம் தீட்டி, பொம்மைகளை வரைந்து, பார்ப்பதற்காகத்தான் வைத்தான்.

கண்ணாடி எதற்கு... முகத்தைப் பார்ப்பதற்கு... ரசமே பூசாத கண்ணாடியில் எதைப் பார்க்க முடியும்? அந்த மாதிரி இன்றைக்கு ஆகிவிட்டோம்.

நம்முடைய தத்துவம் என்ன, நம்முடைய கடமை என்ன, நம்முடைய லட்சியம் என்ன என்பதையெல்லாம் பஜகோவிந்தத்தில் மிக அழகாக சொல்லுகிறார்.

**'கஷ்டம்... கோபம்... குதா யாகாதஹ** சொப்பன விசாரம்'

நீ எங்கிருந்து வந்தாய்? உன் அப்பா அம்மா எங்கிருந்து வந்தார்கள்? எந்தெந்த ஊரிலிருந்து வந்தார்கள்? ஜாதகம் பார்த்தாச்சு... 'கல்யாணமும் பண்ணியாச்சு... கல்யாணம் ஆன பிறகு நாமும் பொறந்தாச்சு...

நாம் ஜாதகம் பார்த்து எங்கெங்கோ இருக்கிற துணையைக் கல்யாணம் பண்ணப் போகிறோம். யார் என்ன என்ற தொடர்பு ஏதாவது இருக்கிறதா? இல்லை, இதெல்லாம் வேதாந்த்திலே உள்ள சின்ன விஷயம்.

அந்தக் காலத்திலே நீ யார்? நான் யார்? என்று விசாரம் செய்வது ரொம்பப் பலமாக இருந்தது. இப்போது அதெல்லாம் போய்விட்டது.

ரமணமகரிஷி பற்றிச் சொல்லும் போது, அவர் நான் யார் என்று கேட்டுவிட்டு, அது இல்லை, இது இல்லை என்று சொல்லிக் கொண்டே வந்தார். கடைசியாக ஆத்மாதான் என்று சொன்னார். எல்லோரும் அதையே பிடித்துக் கொண்டு அவரிடம் போய் அவரது ஃபிலாசபி தங்களுக்குப் பிடித்து விட்டது என்று கூறினார்கள்.

இந்த விஷயம் ரமணமகரிஷிக்கு எப்படி வந்தது? அந்தக் காலத்தில் வேதங்களிலும், வேதாந்தத்திலும் சொல்லப்பட்டதே அதுதான் அவரது அனுபவத்திற்கு வந்தது. அந்த அனுபவத்தை வைத்துதான் அவர் சொன்னாரே தவிர சொந்தமாக எதுவும் சொல்லவில்லை.

கோபத்தை ஆதிசங்கரர் 'நீ யார்?' என்று கேட்டார். 'நான் யார்' என்று கேட்கவில்லை.

எதுவரைக்கும் நீ யார், நான் யார்? என்ற வேற்றுமை உணர்வு இருக்குமோ, அதுவரைக்கும் வேற்றுமைகளும் இருக்கும்.

எப்போது நீ யார்? நான் யார்? என்ற வேற்றுமைகள் அற்றுப் போகுமோ, அப்போது வேற்றுமைகள் இருக்காது. சண்டை இருக்காது, சச்சரவு இருக்காது. கோபமும் இருக்காது... என்று உபநிஷத்துக்களே சொல்லிவிட்டன.

ஆனால் எல்லாவற்றிற்கும் மூலம் என்ன? வேதங்கள்தான்! அந்த வேதங்களில் சொல்லப்பட்டதை அப்படியே ஆதிசங்கரரும் சொன்னார். ஆதிசங்கரர் சொன்னதை அப்படியே உபநிஷத்துக்களும் சொன்னது.

அதைத்தான் நாம் இன்று உபன்யாசம் பண்ணிக் கொண்டு இருக்கிறோம். இத்தனைக்கும் அடிப்படையான வேதங்களில் அத்தனை கருத்துக்களும் இருக்கிறது.

ஆகையினால் நாம் நம்முடைய மூல நூல்களை மறக்காமல் இருக்க வேண்டும். மூல நூல்களில் இருந்துதான் இத்தனையும் நமக்கு வருகிறது.

பல பேர் என்னிடம் கேட்கிறார்கள்: எல்லோருமே வேதம் படிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் அர்த்தம் தெரியவில்லை. நமக்கும் அர்த்தம் தெரிய வில்லை.

நான் அவர்களுக்குச் சொல்வது வேதம் மூன்று விதமாக நமக்குப் பலன் அளிக்கிறது. ஒன்று வேதத்தைக் கேட்டாலே புண்ணியம். யாராவது சொல்லிக் கொண்டு இருந்தாலே, அதைக் காதாலே கேட்டாலே அதுவொரு புண்ணியம்.

நமக்குப் படிக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. எங்கே வேத உபன்யாசம் நடைபெறுகிறதோ அதைத் தேடிச் சென்று கட்டாயம் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

அடுத்தது, வேதங்களைச் சொல்பவர்களுக்கு உடலில் நரம்புகளிலிருந்து உடம்பின் ஒவ்வொரு அங்கங்களும் சிறப்பாக வேலை செய்வதால், அவர்களுக்கு உடல் ஆரோக்கியம் மிக நன்றாக இருக்கும். வேதமந்திரத்தின் மூலமாக ஒவ்வொரு உறுப்புகளுக்கும் ஒரு விசேஷம் கிடைக்கிறது.

அந்தச் சக்தி வேதத்திற்கு இருப்பதால் அதைச் சொல்கிறவர்களுக்கும் அந்தப் புண்ணியம் கிடைக்கும்.

அதனால் வேதம் படிப்பதால் அவர்களுக்குப் புண்ணியம் கிடைப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்.

உடல் உறுப்புகளுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைப்பது என்பது பெரிய விசேஷம்.

அடுத்தது வேத பாஷ்யம். வேதத்திலுள்ள கருத்துக்களை வேத பாஷ்யம் கற்றுக் கொண்ட பிறகு சொன்னால், நாம் செய்யும் காரியங்களுக்குக் கண்டிப்பான பலன் இருக்கும்.

வேதத்தைக் கேட்பது வேதத்தைப் படிப்பது- வேதம் சொன்னபடியான காரியங்களைச் செய்வது இப்படி மூன்று தினுசுகளையும் கடைப்பிடித்தால் நல்லது.

வேதத்தைக் கேட்பது எல்லோருக்கும் பொதுவானது. வேதத்தைப் படிப்பதும் எல்லோருக்கும் பொதுவானது. வேதத்தை எல்லோரும் கடைப் பிடிக்கணும்.

இன்றைக்கு சென்னையிலே, தாம்பரத்தைத் தாண்டி ஒரு இடத்திலே பள்ளிப்பாடத்தோடு, சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தோடு சேர்த்து வேதம் படிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் சுமார் 28 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

(தொடரும்)

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்கந்த ஷஷ்டி



**வக்ரதுண்ட மஹாகாய சூர்யகோடி சமப்ரபா**
**நிர்விக்னம் குருமேதேவா சர்வ கார்யஷு சர்வதா**

**மயூராதி ரூடம் மஹாவாக்ய கூடம்**
**மனோஹாரி தேகம் மகச் சித்த கேஹம்**
**மஹாதேவ தேவம் மஹாதேவ பாலம்**
**மஹாதேவ பாலம் பஜே லோக பாலம்**

இன்றைய தினம் ஸ்கந்த சஷ்டி விழாவை ஒட்டி, இந்த பிரம்மச்சாரிகளைக் கொண்டு, இந்த கலாச்சார விழா நடைபெற்று வருகின்றது. நம்முடைய தேசத்திலே, நவராத்திரி சமயத்திலே சுவாசினி பூஜையும், கன்னிகா பூஜையும் நடைபெற்று வருகிறது. மற்றபடி, வெள்ளிக்கிழமை, பௌர்ணமி போன்ற நாட்களிலும், அவரவர் சௌகரியப்படி அவர்களும் செய்து வருகிறார்கள். இந்த பிராமச்சாரிகளை வரவழைத்து, கிராமங்களிலே இந்த சஷ்டியன்று, சுக்லபக்ஷ ஷஷ்டியன்று அவர்களுக்கு வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்து, போஜனம் பண்ணி வைப்பது என்பது, ஒரு ஐதீகமாக, பாரம்பரியமாக இருந்து வருகிறது.

அந்த வாய்ப்பு, அந்த பழக்கம் குறைந்தவிட்ட நிலையிலே, அதை நினைவு படுத்துவதற்கும், கலாச்சார தொடர்ச்சிக்காகவும், இன்றைய தினம், சுப்ரமணிய ஷஷ்டியன்று, கந்த ஷஷ்டியன்று, சென்னை நகரத்திலே, நல்ல முயற்சியுடன், இந்த பிரம்மச்சாரிகள், வேதம் படிக்கக்கூடிய பிரம்மச்சாரிகள், உபயுக்த பாடங்கள், சூக்தங்கள் படிக்கக் கூடியவர்கள், உபதேசம் ஆனவர்கள்,

காயத்ரி உபதேசம் ஆனவர்கள், பிரம்ம உபதேசம் ஆனவர்கள், இப்படி அனைவரையும், இங்கு ஒருசேர, ஒரு இடத்திலே, வரவைத்து, சமிதாதானம், சுப்பிரமணிய புஜங்கம் பாராயணம் செய்தல், இது போன்ற நல்ல விஷயங்களுடன் சென்னன்குடி பக்த சமாஜம், மற்றும் ஆஸ்திகாளுடைய ஏற்பாட்டிலே சிறப்பான முறையிலே நடந்து கொண்டு இருக்கிறது.

தற்போது வைதீகர்களால் சுப்ரமண்ய த்ரிசதி, இது போன்ற வைதீக அனுஷ்டானங்களுடன்; அதாவது நவீன உலகத்திலேயும், ப்ராசீனமான, சாஸ்த்ரியமான பழக்க வழக்கங்களை நாம் விடாமல், **ஸ்வதர்மோ நிதநம் ஸ்ரேய; பரதர்மோ பயாவஹ**-அழகாக இருக்கிறது, சுலபமாக இருக்கிறது என்று, மனதிற்கு பிடித்ததாக இருக்கின்றது என்று வேறு வழிக்கு செல்லாமல், நம்முடைய தர்மத்தை, நம்முடைய கலாச்சாரத்தை, முழுமையாக செய்ய முடிந்தாலும் சரி, முழுமையாக செய்ய முடியாவிட்டாலும் சரி, நம்முடைய தர்மத்தை நாம் செய்ய வேண்டும் என்பதாக பகவத்கீதையிலே, கிருஷ்ண பரமாத்மா சொல்லி இருக்கிற விதத்திலே, ஸ்வதர்ம அனுஷ்டானம் என்பது நம்முடைய தேசத்திலே முக்கியம். ஆகவே அதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கக் கூடியது இந்த நிகழ்ச்சி. ரிஷி தர்மம் சொல்லி, அன்னபூர்ணா ஸ்தோத்திரம் சொல்லி- **சத்யம் த்வர்த்தேன பர்ஷிஞ்சாமி** என்றெல்லாம் சொல்லி, இது போன்ற நியமத்துடன், இயற்கையாக கிராமத்திலே கிடைத்த இந்த வாய்ப்பை, சென்னை நகரம் போன்ற இடத்திலேயும் ஏற்பாடு செய்து, நல்ல நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது.

இங்கும், தாமிரபரணிக் கரையிலே, தொழில்நுட்பம், தாமிரபரணி, சென்னையை இணைக்கிறது. இதிலே, தாமிரபரணிக் கரையிலே, இந்த திருப்புடைமருதூரிலே, சிறப்பான ஏற்பாட்டோடு, இங்கு ஜபங்கள், தினமும் சதுர் வேத பாராயணம், தினசரி ஏகாதச ருத்ர ஹோமங்கள், கச்சேரிகள், வில்லுப்பாட்டு கலைநிகழ்ச்சிகளுடன் , இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தொடர்ந்து பக்தர்கள் இது போன்ற நல்ல விஷயங்களிலே, பெற்றோர்கள் குழந்தைகளை மேலும் உற்சாகப்படுத்தி, ஈடுபடுத்தி, கலாச்சார பழக்க வழக்கங்களிலே அவர்களுக்கு அறிவும், ஆர்வமும், அபிமானமும் வளரும் விதத்திலே இந்த நிகழ்ச்சிகளை நடத்தி, அந்த சுப்ரமண்யருடைய க்ஷேத்திரங்கள், தென்னாட்டிலே நிறைய இருக்கின்றன. குறிப்பாக அறுபடை வீடு க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. அந்தக் கௌமாரம் என்று சொல்லக்கூடிய, ஸண்மதத்திலே, கௌமாரம் என்ற பததி, தமிழ்நாட்டிலே சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

காணபத்யம், கௌமாரம், சௌரம், சாக்தம், சைவம், வைணவம்-இந்த ஷண்மதங்களிலே, கௌமாரம் என்ற குமாரசுவாமி பக்தி கடவுளுடைய பக்தி, தமிழ்நாட்டிலே சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதற்கு முக்கியமான நாள், இந்த கந்தஷஷ்டி நாள். இதை சிறப்பாகக் கொண்டாடி, சுப்ரமணியருடைய அனுக்ரகத்தினால், இந்த பிரம்மண்யம் சிறந்து விளங்க - சுப்ரம்மண்யோஹம், சுப்ரம்மண்யோஹம், சுப்ரமண்யோம் -அதாவது சாத்வீகமான ஆகாரம், சந்தியாவந்தனம், காயத்ரி செய்வது, சமஸ்க்ரிதம் படிப்பது, கோஷம்ரக்ஷணம் செய்வது, சுத்த சாகாகரமாக இருப்பது, ஏகாதசி, ஷஷ்டி போன்ற நாட்களிலே, தேவையான மாறுதல்களை ஆகாரங்களிலே செய்து கொள்வது, வேதங்களை நாம் போஷித்து, நாம் அத்யயனம் செய்வதையும், அத்யயனம் செய்தவர்களை கௌரவப்படுத்துதல், நிறைய ஹோமங்கள், பாராயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் - இது போன்ற வேத தர்மத்தை, அது போன்று வேப்ப மரம், அரச மரம், வில்வ மரம், இலுப்பை போன்ற மரங்களை நடுவது, ஹோமங்களுக்கும், பூஜைகளுக்கும் உகந்த மரங்களையும், புஷ்பங்களையும், நந்தவனங்களை அமைப்பது -இது போன்று வேத நெறியை ஒட்டிய நல்ல காரியங்களை செய்வது, அன்னதானம் செய்வது; இது போன்ற நல்ல காரியங்களை செய்து, இது மாதிரி நம்மை ஈடுபடுத்திக் கொள்வது- donationகொடுப்பது என்று ஒன்று, நாமும் அதிலே கலந்து கொண்டு, நம்முடைய சரீரத்தினால் ஆகக் கூடிய சேவைகளை செய்வது. இது போன்ற நல்ல காரியங்களை செய்து - **மயூராதி ரூடம் மஹாவாக்ய கூடம்**- மயில் மேல் வருகிறார் அவர். **மகாவாக்ய கூடம்** - அவரை சாதாரண வார்த்தைகளால் அறிய முடியாது, சுப்ரமண்யரை. மிகப் பெரிய வேத மந்திரங்கள், உபநிஷத் மந்திரங்கள்-அதிலே அவருடைய தத்துவம் அடங்கி இருக்கிறது - **மகாவாக்ய கூடம். மனோஹாரி தேஹம்** - அவருடைய அழகு என்பது திவ்யமான அழகு. மனோஹாரி தேஹம் -சர்வாங்க சுந்தரராக இருக்கிறார். மகசித்த கேஹம் - அவர் எங்கு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார் என்றால் - யார் வல்லவர்களோ, யோகிகளோ, சித்தர்களோ, அவர்களுடைய மனதிலே அவர் குடிகொண்டு இருக்கிறார்.---**மகாதேவ பாலம்** - பரமேஷ்வர் உடைய குமாரர், **அதிலோக பாலம்** - இந்த உலகத்தை காப்பவர். அதாவது தேவர்கள் உலகைக் காப்பாற்றுகிறார்கள். அவர்களுக்கும் உதவி தேவைப்பட்ட சமயத்திலே, தேவசேனாபதியாக இவர் விளங்கி, அவர்களையும் பாதுகாத்தவர் என்பதனாலே, லோகபாலகராக, உலகத்தை காப்பவராக விளங்குகிறார். இப்படி இந்த புண்ய தினத்திலே, இந்த வைதீகமான அனுஷ்டானத்தின் மூலமாக -அந்த பிரம்மவர்ச்சசை பெறுவதற்கு - இந்த சட்ட போட்டுகிறது, அந்த

சட்டை போட்டுகிறது என்பது வெளியே இருக்கும். ஜபம் செய்வது, நியமத்தோடு இருப்பது முகத்திலே ஒரு பொலிவை, சாத்வீகமான சக்தியை அளிக்கவல்லது. அந்த பிரம்மவச்சை பெறுவதற்கான இது போன்ற முயற்சிகளிலே மேன்மேலும் ஈடுபட்டு, இந்த தர்மத்தை, சுப்ரமண்யம், சுப்ரமண்யம் என்ற அனுஷ்டானங்களை மேன்மேலும் சிறந்து, பக்தர்கள் அனைவரும் ஈடுபட்டு, சுப்பிரமண்யார் சுவாமி அருள் பெரும் விதத்திலே, இந்த முயற்சிகள் தொடர வேண்டும்.

வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி



***ஏப்ரல் 22*** - இன்று திருப்பதியில் அக்ஷய த்ரித்யை புண்ய காலமானதால் ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்கள் அனைவருக்கும் தரிசனம் தந்தருளினார்கள்.

***ஏப்ரல் 25*** - ஸ்ரீ ஆதிசங்கரர் ஜயந்தி மஹோத்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காஞ்சி பரமாமாசார்யர்களால் வேதம் பாதுகாக்கப்படவும், வேதக் கல்வி பரவவும் ஆரம்பிக்கப்பட்ட வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் மூலம் வேதம் பயின்று பூர்த்தி செய்த வித்யார்த்திகளுக்கு ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அவர் தம் பொற்கரங்களால் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பூர்த்தி செய்த வித்யார்த்திகளின் குடும்பத்தினருக்கும் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் தனித்தனியே அழைத்து அருளாசி வழங்கினார்கள். தொடர்ந்து பக்தர்களுக்கு ஸ்ரீ சுவாமிகளின் அனுக்ரஹபாஷணமும் நடந்தேறியது.

***ஏப்ரல் - 27*** பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் புக்கா சங்கர மடத்தில் ஸ்ரீ ஆதி சங்கரர், ஸ்ரீ சங்கர விநாயகர் சந்நிதிகளின் கும்பாபிஷேகமும் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து இரு சந்நிதிகளிலும் அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. இவ்விடத்தின் அருகாமையில் உள்ள கிராமங்களிலிருந்தும், நகர பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். தொடர்ந்து பக்தர்களிடையே ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் நிகழ்த்தி அருளினார்கள்.

இவ்விடத்தில் இதற்கு முந்தைய கும்பாபிஷேகம் ஸ்ரீஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் 2006ம் வருடம் ஜுன் 16ம் தேதியில் நிகழ்த்தப்பட்டது. இங்கு ஸ்ரீ ஆதி சங்கரர் பிரதிஷ்டை 1939ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதியன்று பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகளால் நிகழ்த்தப்பட்டது. புக்கா க்ஷேத்ரம் தக்ஷிண காசியாக வருணிக்கப்படுகிறது. நான்கு புறங்களிலும் மலைகளால் சூழப்பட்டதும், கோவில்கள் சூழ்ந்த இடமாகவும் உள்ளது. மேலும் கொஸஸ்தலை ஆற்றங்கரையில் அமைந்ததுமாகும். கௌதம ரிஷியால் ஸ்தாபிக்கப்பட்டதுமாகும். பூஜ்ய ஸ்ரீ மஹாஸ்வாமிகள் 1932ல் இவ்விடத்தில் சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டித்துள்ளார்கள்.

தொடர்ந்து அருகாமையில் உள்ள ஸ்ரீ அன்னபூரணி தேவி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு விஜயம் செய்த பின்னர் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருப்பதி அலிப்பிரி காஞ்சி காமகோடி பாதுகா மண்டபம் திரும்பினார்கள்.

திருப்பதி ஸ்ரீ மடத்திற்கு அருகாமையில் புதிதாக திருமலா திருப்பதி தேவஸ்தானத்தினரால் கட்டப்பட்ட விழா மண்டப கட்டிடத்தில் ஆரம்பமாகிய இரண்டு நாள் ராஷ்ட்ரிய வார்ஷிக சம்மேளனத்திற்கு வருகை தந்து அருளாசி வழங்கியதுடன் வருகை தந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

**மே 1** - ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் விஸ்வரூப தரிசனத்திற்கு பின்னர் காலை திருப்பதியிலிருந்து முகாம் நெல்லூருக்கு புறப்பட்டது. ஜொன்னவாடா ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் மே 3ல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை பார்வையிடும் பொருட்டு புறப்பட்டது. இத்திருக்கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டும், வேத பாராயணம், ஹோமங்கள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளுடன் விழாக்கோலம் பூண்டிருந்தது.

**மே 3** ம் நாள் காலை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் ஸ்ரீ மல்லிகார்ஜுனா சமேத காமாக்ஷி அம்பாள் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு சந்நிதிகளில் அபிஷேக ஆராதனைகளும் கலச தீர்த்தங்களால் செய்விக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது ஸ்ரீ காஞ்சி காமகோடி பக்த பிரசார ரதத்தையும் கொடியசைத்து துவக்கி வைத்து அருளினார்கள்.

**மே 4** - காலை ஜொன்னவாடாவிலிருந்து புறப்பட்டு மீண்டும் திருப்பதி பாதுகா மண்டபத்திற்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் திரும்பினார்கள். இன்று ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி

*தினமானதால் நித்ய பூஜைகளைத் தொடர்ந்து விசேஷ ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி பூஜைகளும் நடைபெற்றன. மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரையிலான சந்தியா காலத்தில் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து நரசிம்ம அவதார கட்டம் பாராயணம் செய்யப்பட்டது.*

**மே 5** - *ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் வபன பௌர்ணமி தர்சனம் முடிந்த பின்னர் பௌர்ணமி நன்னாளான இன்று திருப்பதியில் உள்ள ஸ்ரீ கங்கம்மா திருக்கோவில் கும்பாபிஷேகத்திற்கு புறப்பட்டு சென்று நடத்தி வைத்தார்கள். மாலை பௌர்ணமி விசேஷ பூஜை ஸ்ரீ மடம் முகாமில் நடைபெற்றது.*

**மே 7** - *பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திருப்பதி அருகில் உள்ள யேர்பேடு என்னும்மிடத்தில் திருப்பதி பகுதியில் அமைந்துள்ள இந்தியன் தொழிநுட்ப நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளை நிறுவத்தின் இயக்குநர் திரு. பேராசிரியர் K.N. சத்தியநாராயணா மற்றும் இதர நிறுவன ஊறுப்பினர்களால் வரவேற்கப்பட்டுநிறுவனத்தின் வருங்கால திட்டங்கள் குறித்த கண்காட்சியையும் விளக்கினார்கள். நிறுவனத்தின் மண்டபத்தில் துவங்கப்பட்ட நிகழ்ச்சியில் இறைவணக்கம் அப்பகுதி சிறார்களின் ஆதிசங்கராசார்ய குரு ஸ்தோத்திரத்துடன் துவங்கப்பட்டது.*

*பேராசிரியர் சத்தியநராராயண வரவேற்புரையளித்தார். தொடர்ந்து சென்னை இந்திய தொழிற்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர் பேராசிரியர் காமகோடி தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். கூடியிருந்த மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களிடையே அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள். மேலும் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் திருப்பதியில் காஞ்சி மஹாஸ்வாமி புதிய சாலையையும் (விளிம்பையும்) துவக்கி வைத்தார்கள். இந்நிகழச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் மடில்லா குருமூர்த்தி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் போது 1932ல் பூஜ்ய ஸ்ரீ மஹாஸ்வாமிகளுடைய பாத யாத்திரையின் பழைய நிகழ்வுகள் நினைவு கூறப்பட்டு, ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அனுக்ரஹபாஷணமும் பக்தர்களுக்கு அருளிச் செய்தார்கள்.*

**மே 8** - *இன்று சாந்த்ரமான பஞ்சாங்கத்தின்படி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் பட்டத்துக்கு எழுந்தருளிய திருநாளானதால் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.*

**மே 11** - *பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அன்றாட நித்ய பூஜைகள் முடித்து பக்தர்கள் அனைவருக்கும் தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். கலை நிகழ்ச்சி பயிற்சி*

முகாம் குழந்தைகள் அவர்களின் பயிற்சி முகாம் மூலம் தயாரிக்கப்பட்ட கிரீடத்தை சமர்ப்பித்தார்கள்.

**மே 15** - திருப்பதி பாதுகா மண்டபத்தில் முகாமிட்டுள்ள ஸ்ரீஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருமலைக்கு இன்று விஜயம் செய்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுக்கு திருக்கோவில் மரியாதைகள் மங்கள வாத்யங்களுடன் வேத கோஷங்கள் முழங்க அளிக்கப்பட்டது. ஸ்ரீ வாரி சந்நிதியில் மாபி ஆரத்தி தரிசனம் செய்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் வெங்கடாசலபதி சுவாமிக்கு வெண்சாமர சேவை செய்வித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுக்கு ப்ரசாதம் வழங்கப்பட்டது. மேலும் ஸ்ரீவாரி சந்நிதியிலிருந்து ஸ்ரீ சடாரி எடுத்து வரப்பட்டு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் திருக்குடைகளுடன் மாட வீதிகளில் அழைத்து வரப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குரு தரிசனமும் , ஸ்ரீ வாரி தரிசனமும் செய்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுடன் திருமலா திருப்பதி தேவஸ்தான இணை செயல் அலுவலர், இதர அதிகாரிகள் மற்றும் திருக்கோவில் பட்டர்களும் கலந்து கொண்டார்கள்.

**மே 20** - ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் நித்ய பூஜைகள் முடித்து பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருளாசி வழங்கினார்கள். கோவூர் முகாமில்ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை முடித்து ஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்



**ராகம் பஹாடீ**

**ம்ஹாரே ஜனன் மரண் ரா ஸாதீ தானே நஹீம் பிஸ்ரூம் தின் ராதீ**
**தாம் தேகாம் பின் கல் ந ப்டதா ஹை ஜாணத் மேரீ சாதீ**
**ஊன்சி சட் சட் ப்ந்த் நிஹாரூம் ரோய் ரோய் அங்கியாம் ராதீ**
**யோ ஸம்சார் சகல்ஜக் ஜூடோம் ஜூடோ குல் ரா ந்யாதீ**
**தோய் கர் ஜோட்யாம் அரஜ் கரூம் சூம் ஸுன் லீஜோ மீரீ பாதீ**
**யோ மன் மேரோ படா ஹராமீ ஜ்யூம் மதமாதோ ஹாதீ**
**ஸதுகர் ஹாத் தரயோ ஸிர் ஊபர் அங்குஸ் தே ஸமஜாதீ**
**பல் பல் பிஉ கோ ரூப் நிஹாரூம் நிரக் நிரக் ஸுக் பாதீ**
**மீரா கே ப்ரபு கிரிதர் நாகர் ஹரி சரணாம் சித ராதீ**

*பொருள் : ஹே! கிரிதரனே நீஎன் ஜனனத்திலும், சகா மரணத்திலும் ஸகா. இரவிலும் பகலிலும் நீ என் ஸகா. உன் பிரிவால் உடல் வலிக்கிறது. இதயம் அழுகிறது.மேலும் மேலும் உன்னைப் பார்க்கிறேன். ஒவ்வொரு இரவும் என் கண்கள் அழும். இந்த உலகம் ஒரு மாயை. உறவினர், குடும்பம் மாயை. ஹே! கிரிதர் என் மனம் ஒரு மதம் பிடித்த யானை. என் ஆசார்யன் அவன் கையால் என் தலையைத் தொட்டான். மதத்தை அழித்தான். ஒவ்வொரு நிமிடமும் என் சகாவைப் பார்க்க பார்க்க ஆனந்தமே. மீராவின் நாதன் கிரிதரன். குன்றம் ஏந்தி குளிர் மழை காத்தவன். அவளுடைய ஆத்மா அவன் சரண கமலத்தில்.*

# ராஜதரங்கிணி

பி. ஆர். கண்ணன்

## ராஜா ஜலௌகர்

அசோகரின் புத்ரன் ஜலௌகர் ராஜாவாகி, ம்லேச்சர்களை நாட்டைவிட்டுத் துரத்தி, நிறைய பூமிப்பகுதிகளை வென்று, காஷ்மீரை பெருமை வாய்ந்த ராஜ்யமாக்கினார்.

**யஸ்ய திவ்யப்ரபாவஸ்ய கதா: ஶ்ருதிபதம் கதா: ।**
**ஆஶ்சர்யாசார்யதாம் யாந்தி நியதம் த்யுஸதாமபி ॥ 109 ॥**

ஜலௌகருடைய திவ்யமான சக்தியின் கதைகளைக் கேள்வியுற்ற தேவர்கள்கூட பேராச்சர்யமடைந்தனர். ஜலௌகருக்கு அதிசய ஸித்திகள் கைவரப்பெற்றிருந்தன. நீரில் வெகுநேரம் மூழ்கியிருக்கும் சக்தி அவருக்கிருந்தது.

**தர்மாத்யக்ஷோ தநாத்யக்ஷ: கோஶாத்யக்ஷஶ்சமூபதி: ।**
**தூத: புரோதா தைவஜ்ஞ: ஸப்த ப்ரக்ருதயோபவந் ॥ 119 ॥**

**கர்மஸ்தாநாநி தர்ம்யாணி தேநாஷ்டாத ஶ குர்வதா ।**
**தத: ப்ரப்ருதி பூபேந க்ருதா யௌதிஷ்ஷ்டிரீ ஸ்திதி: ॥ 120 ॥**

ஜலௌகர் ஏழு முக்கிய அதிகாரிகளை நியமித்தார் - நீதிபதி, வருவாய் அதிகாரி, பொருளாளர், சேனாதிபதி, தூதர், புரோஹிதர், ஜோதிஷர் என்று; 18 துறைகளை உண்டுபண்ணி, யுதிஷ்டிரர் போன்ற ராஜ்ய அமைப்பை ஏற்படுத்தினார். பல அக்ரஹாரங்களை அமைத்து வழங்கினார் அரசர்; ராணியோ, தெய்வசக்தி மிகுந்த மாத்ருசக்ரங்களை நிறுவினார். ஸ்ரீநகரில் ஜ்யேஷ்டருத்ரரின் ஆலயத்தை எழுப்பிய ராஜாவுக்கு கொள்ளை ஆசை: நந்திக்ஷேத்ரம் என்ற ப்ரஸித்தமான சிவஸ்தலத்தில் ஸோதரம் என்ற தெய்வீக ஊற்று உள்ளது போலவே, ஸ்ரீநகரிலும் இருக்க வேண்டும் என்று. அவருடைய ப்ரார்த்தனைக்கிணங்க, ஸ்ரீநகரில் ஒரு திவ்யமான ஊற்று திடீரென உண்டாயிற்று. ஸோதர ஊற்றைப் போலவே அது இருந்ததைக் கண்ணுற்ற ஜலௌகருக்கு ஆனந்தம் அதிகமாகும்படி ஒரு ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. ராஜா ஒரு காலியான தங்க குடத்தை ஸோதரத்தில் விட்டார். இரண்டரை நாட்கள் கழித்து அதே குடம் ஸ்ரீநகரில் இந்தப் புதிய ஊற்றில் கிடைக்கப் பெற்றதால், ஸோதர ஊற்றே,

சிவக்ருபையால் ஸ்ரீநகரிலும் உண்டாகியுள்ளது என்று எல்லோருக்கும் புரிந்துவிட்டது. பல வருஷங்கள் நல்லதொரு ராஜ்யத்தை ஆண்டபிறகு, ராஜா முக்தியடைந்தார்.

**புக்த்வைஶ்வர்யம் ஸ பர்யந்தே ப்ரவிஷ்டஶ்சீரமோசநம் ।**
**பத்ந்யா ஸமம் யயௌ ராஜா ஸாயுஜ்யம் கிரிஜாபதே: ॥ 152 ॥**

சீரமோசன க்ஷேத்ரத்தில் தங்கிய ராஜா பத்னியுடன் த்யானத்திலமர்ந்து சிவஸாயுஜ்யம் அடைந்தார்.

**ராஜா தாமோதரர்- II**

சிறந்த சிவபக்தரான இவருடைய ஆட்சியில் காஷ்மீர் சிறந்து விளங்கியது. அவர் குபேரனுடனும், யக்ஷர்களுடனும் நட்பு வைத்திருந்தார். குத்தா என்ற இடத்தில் ஒரு பெரிய அணையையும், மற்றும் பல நீர்த்தேக்கங்களையும், பாலங்களையும் அவர் யக்ஷர்களின் உதவியுடன் கட்டினார்.

கல்ஹணர் பல இடங்களில் வாழ்க்கையின் நிலையாமை, எதிர்பாராத்தன்மை ஆகிய தன்மைகளை சுட்டிக் காட்டுகிறார்.



**ஹிதம் லோகோத்தரம் கிம்சிச்சிகீர்ஷோருந்நதாத்மந: ।**
**ரோஹந்தி ஹா திக்ப்ரத்யூஹா மிதபுண்யதயா ந்ருணாம் ॥ 158 ॥**

ஒரு உயர்மனிதன் ஏதாவது மிகச்சிறந்த கார்யம் செய்ய முற்படுகையில், ஜனங்களின் புண்யக் குறைவினால் இடையூறுகள் ஏற்படுகின்றன. ஒருசமயம், ராஜா ஶ்ராத்தம் செய்யும் தினத்தன்று திடீரென வந்த ஒரு ப்ராம்மணர் குழு, தாங்கள் மிக்க பசியினால் வருந்துவதால், உடனேயே உணவு தரும்படி வற்புறுத்தினர். ஸ்னானத்திற்காக விதஸ்தா நதியருகில் சென்றிருந்த ராஜா, ஶாஸ்த்ரப்படி ஸ்னானத்தை முடித்தபிறகு உணவளிப்பதாகத் திரும்பத் திரும்பச் சொல்லியும் கேளாத ப்ராம்மணர்கள், ராஜாவை ஸர்ப்பமாகும்படி சபிக்கவே, ராஜா ஸர்ப்பமாக விழுந்தார்.

**துருக்கிய ராஜாக்கள் ஹுஷ்கன், ஜுஷ்கன், கனிஷ்கன்**

இந்த துருக்கிய ராஜாக்கள் காலத்தில் புத்த மதம் ஓங்கிற்று; ஆனால் ஸனாதன மதத்திற்கு ஊறு ஏதும் நிகழவில்லை. புத்தமத அறிஞர் நாகார்ஜுனர் சிறிதுகாலம் இவர்கள் ராஜ்யத்தில் தங்கியிருந்தார்.
















**ராஜா அபிமன்யு**

சிறந்த ராஜாவாகிய இவர் காலத்தில் இவரை தேவேந்த்ரனுக்கு ஒப்பிட்டுப் பேசினர். இவர் ராஜ்யத்தில் சந்த்ராசார்யர் என்ற புலவர் பதஞ்ஜலியின் மஹாபாஷ்யத்தை உபதேசித்தார். பாணினியின் வ்யாகரண ஸூத்ரங்களுக்கு பதஞ்ஜலி எழுதிய இவ்வுரையின் அடிப்படையில் பல ஸம்ஸ்க்ருத இலக்கண நூல்களை யாத்தார்.

பின்னர் பௌத்தர்களுக்கும், நாகர்களுக்கும் யுத்தங்கள் ஏற்பட்டு, பெரும் நாசம் உண்டாயிற்று. சந்த்ரதேவர் என்ற ப்ராம்மணர் தபஸ் செய்து, நாகத்தலைவர் நீலரை தரிசித்து, நீலமத புராணத்தில் சொல்லப்பட்டுள்ள ஸனாதன தர்மத்தின் சடங்குகளை மறுபடியும் ராஜ்யத்தில் ஸ்தாபித்தார்.

**ராஜா கோநந்தர் - III**

இவர் நல்ல ராஜாவாகத் திகழ்ந்தார். நீலமத புராணப்படி உத்ஸவங்கள், அனுஷ்டானங்கள் ஆகியவற்றை செயல்படுத்தினார். கோநந்த வம்சத்தின் சிறந்த ஆதி ராஜாவாக இருந்த அவர், ரகுகுலத்தில் ரகு இருந்ததைப்போல ப்ரகாசித்தார் என்று கல்ஹணர் புகழ்கிறார்.

அவர் காலத்திற்குப் பிறகு, அவர் புத்ரன் விபீஷணர் ராஜாவானார்; 60 வருஷங்கள் ராஜ்யமாண்டார்.

(தொடரும்)

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 7

***'யம் ப்ரவ்ரஜந்த மநுபேத மபேத க்ருத்யம்
த்வைபாயநோ விரஹகாதர ஆஜுஹாவ ।
புத்ரேதி தன்மய தயா தரவோகுபிநேது :
தம் ஸர்வபூதஹ்ருதயம் முனிமாநதோஸ்மி ॥'***

எந்தவொரு கர்மவினையாலும் பின்தொடரப்படாதவராக உலகை மறந்து, தந்தையை மறந்து, தன்னையும் மறந்து எவர் சென்றாரோ, இவ்வாறு சென்ற எவரை மகன் மேலுள்ள வாஞ்சையால் மகனே, மகனே என்று கூவிச் சென்ற போது அங்கிருந்த மரம், செடி, கொடிகள் கூட ஏன், ஏன் என்று கேட்டனவோ, அத்தகைய எல்லா உயிர்களுக்குள்ளும் உறைகின்ற பிரம்மத்தோடு ஸர்வாத்ம பாவத்தை அடைந்த சுகருக்கு நமஸ்காரம்.

வியாஸருடைய பரந்த, ஆழ்ந்த, எல்லையற்ற சாஸ்திர ஞானமனைத்தும் ஒரு வடிவாக உருவெடுத்து வந்தவர் சுகர். அத்விதீய அனுபவ நிஷ்டையாகிற ஜீவன் முக்தி நிலை அநுபவ ஸாத்யமே என்பதை நிரூபிக்க வந்த அவதாரம் சுகாவதாரம். வேதாந்தத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியவையே இவரது வாழ்வும், வாக்கும், அத்வைத வேதாந்தம் சாஸ்திர வசனங்களின் பிரமாணத்தை மட்டும் நம்பி இல்லை. இவ்வேதாந்ததம் அனுபவத்தின் பாற்பட்டது. பகவத்பாதர் இதனைத் தெளிவுற விளக்குகிறார்.



ப்ரஹ்மானுபவம் தர்மத்தைப் போன்றது அல்ல. இது முழுக்க முழுக்க அனுபவத்தைச் சார்ந்தது. ***'ச்ருத்யாதய: அனுபவாதயஸ்ச்ச யதா ஸம்பவம் இஹ ப்ரமாணம்'***

ஜீவன் முக்தி நிலையை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. ஏனெனில் ***'ஞானாக்னி தக்த கர்மாணி'*** என்று கர்ம வாஸனைகள் அனைத்தும் எரிந்து போய் எதுவும் மீதமில்லாத நிலை. அவரவர்களுக்கும் அனுபவத்தில் வரும்போதே இந்நிலை புரியும். கரும்பின் இனிப்பும், கற்கண்டின் இனிப்பும், சர்க்கரையின் இனிப்பும் சுவைத்தவனுக்குத் தானே தெரியும்.

இது இனிப்பு என்று எடுத்துக் காட்டி

சுவைத்துப் பார், தெரியும் என்று சொல்ல ஒருவர் வேண்டுமில்லையா? இவரே குரு. இவ்வாறு சொல்பவர் ஒரு ஜீவன் முக்தராக இருக்க வேண்டுமில்லையா? இவ்வாறு ஒரு ஜீவன் முக்த பரம்பரை இந்நாட்டில் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிறது. இதுவே அத்வைத ஆச்சார்ய பரம்பரை. வேதாந்த சிரவணம் இந்த குருபரம்பரா தியானத்துடனேயே துவங்கும். இந்த பரம்பரையில் ஸ்ரீ சுகாச்சார்யாள் ஸ்ரீ சங்கர பகவத் பாதருக்கு பரமேஷ்டி குருவாக அமைகிறார். பொதுவாக தந்தையின் பெயரைச் சொல்லித் தான் மகனை சொல்வது வழக்கம்.

ஆனால் வியாஸரைக் குறிக்கும் போது, **'சுகதாதம் தபோநிதிம்'** என்று சொல்வதால் சுகரின் பெருமை தந்தையின் பெருமையைக் காட்டிலும் விஞ்சியிருப்பதைக் காண்பிக்கிறது. இதைத் தலைப்பில் காட்டியுள்ள சுலோகம் நிரூபிக்கிறது.

சுகர் தேவ குருவான ப்ரஹஸ்பதியிடம் சீடராகி எல்லா சாஸ்திரங்களையும் கற்றார். இயல்பிலேயே சரீரேந்திரியங்கள், அவை சார்ந்த விஷயங்களில், நாட்டமின்றியிருந்தார். இதனால் வ்யாஸர் இவரை ராஜரிஷியான ஜனகரிடம் அனுப்பினார். தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு கால்நடையாகவே மிதிலா தேசம் வந்தடைந்தார். யோக மார்க்கத்தில் நொடியில் செல்லலாமெனினும் தந்தை வாக்கிற்குக் கட்டுப்பட்டு கால்நடையாகச் சென்றார். தன் மகனுக்கு உலக அனுபவம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே நடந்து செல்லும் படிக்கூறினார். மிதிலா தேசம் வந்தார். ஊரின் எல்லையிலிருந்தே ஜனகரால் ஏற்படுத்தப் பட்டிருந்த எல்லா சோதனைகளிலும் வென்றார். குழந்தையின் உள்ளத்தைக் கொண்டவரும், சுற்றியிருக்கின்றவர்கள் நெஞ்சில் சிறிது கூட காமக்ரோதாதி வாஸனைகள் எழாத வண்ணம் செய்யும் ஸந்நிவேசமுடையவரும், 'ப்ரும்மவித்வரிஷ்டன்' என்ற நிலையை அடைந்தவரும், நித்ய ஸமாதியிலிருப்பவரும் தந்தை சொற்காக்க என உபதேசம் பெற வந்திருப்பவருமான சுக முனிவரின் பால் பெரிதும் ஈர்க்கப்பட்டார் ஜனகர். சுக முனிவரை தங்க சிம்மாஸனத்தில் அமர்த்தி பூஜித்து, தான் கீழே அவரது திருவடிவாரத்தில் அமர்ந்து ப்ரும்ம வித்யையை உபதேசித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

தந்தையிடம் திரும்பி வந்தார். சுகரை வியாஸர் திரும்ப நாரதரிடம் கற்க அனுப்பினார். நாரதரிடமிருந்த ஞான பக்தி வைராக்யங்களின் உண்மை சொரூபத்தை கற்றறிந்தார். ஜீவன் முக்தனாக வாழும் வகையறிந்தார். அத்வைதம் ஸத்யம்

என்பதைத் தன் வாழ்வாலும் வாக்காலும் நிரூபித்தார்.

ஸ்ரீ சுகாசாரியாரைப் பற்றிய வர்ணனை இதை நிரூபிக்கும் **'தஸ்ய புத்ரோ மஹாயோகி ஸமத்ருங் நிர்விகல்பக: । ஏகாந்த மதிருந்நித்ரோ கூடோ மூட இவேயதே ॥'** வ்யாஸ குமாரரான சுகாச்சாரியார் மஹா யோகியும், ஸமமான ப்ரஹ்மத்தை அறிந்தவரும், ஆகையால் எங்கும் பேதபுத்தி அற்றவரும், ஒன்றிலேயே நிலைத்த புத்தியுடையவரும், மாயாரூபமான தூக்கத்திலிருந்து விடுபெற்றவரும், இதனால் வெளிப்படையாக எங்கும் காணப்பட முடியாதவரும், மூடன் போன்றவருமாக அன்றோ காணப்படுகிறார்.

இவரது ஞான நிஷ்டையை விளக்கும் நிகழ்ச்சி ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப் பட்டுள்ளது. ஒரு சமயம் 16-வயது யுவாவாக திக்குகளையே வஸ்திரங்களாக உடையவராக சுகாசாரியார் முன்னே நடந்து செல்கிறார். சிறிது தொலைவில் இவரது தந்தை வியாஸர் பின் தொடர்கிறார். இவர் எப்படி இருக்கிறார்? முதியவர். உடைகள் உடுத்தியிருக்கிறார். வழியில் ஒரு நீரோடை. தேவலோகத்து அப்ஸரஸ் ஸ்திரீகள் ஏகாந்தமான இடமென்ற எண்ணத்தில் இடையில் வஸ்திரமின்றி நீராடிக் கொண்டிருந்தனர். கரை வழியே நடந்து செல்லும் சுகாச்சார்யாளைக் கண்டு நீரிலிருந்த படியே இருகரம் கூப்பி வழிபட்டனர். பின்னால் வரும் வ்யாஸரைத் தூரத்தில் கண்டதுமே அவசரம் அவசரமாக துணிகளை உடுத்திக் கொண்டனர். இந்த ஆச்சரியத்தைக் கண்ட வ்யாஸர் ஆர்வம் தாங்காது அந்தப் பெண்களைப் பார்த்துக் கேட்டார். 'என் மகன், யுவா, வஸ்திரமேதும் அணியாத திகம்பரன். அவனைக்கண்டு வெட்கப்படாத நீங்கள் என்னைக் கண்டதும் ஏன் வெட்கப் பட்டீர்கள்' என்றார். அப்ஸரஸ் ஸ்திரீகள் கூறினர், 'முனிவரே ! உங்களுக்கு இன்னும் நான், எனது போகவில்லை. இவள் பெண், இவண் ஆண் என்ற பேத ஞானமுமிருக்கிறது. பரிசுத்தமான திருஷ்டியுடைய தங்கள் குமாரருக்கு இத்தகைய பேதபுத்தியில்லை. அவரது அபேத திருஷ்டி எங்களிடத்திலும் அபேத புத்தியை ஏற்படுத்திவிட்டது' என்றனர். இந்நிகழ்ச்சி அத்விதீய அபேத திருஷ்டி ஸத்யமென்பதையும் இதில் நிலைத்திருந்தவர் சுகாச்சாரியார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

ஸ்ரீமத் பாகவதம் ஒரு அனுபூதி கிரந்தம். அத்விதீய ப்ரஹ்மானுபூதியில் திளைத்திருந்த சுகாசாரியாரைத் தவிர வேறு யார் **ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாSஹம் அம்ருதஸ்யS வ்யயஸ்யச** என்ற

பகவானின் திருவாக்கை மெய்ப்பிக்க முடியும். நிர்குண பிரஹ்ம நிஷ்டையில் ஊறியவர்களே ஸகுண ப்ரஹ்ம நிஷ்டையை நன்கு அனுபவிக்க முடியும். இதற்கு சுகாச்சாரியாரும் பாகவதமுமே நிரூபணங்கள். 'பக்த்யர்த்தம் கல்பிதம் த்வைதம் அத்வைதாதபி ஸுந்தரம்' என்பதை நிரூபித்தவர் சுகாச்சாரியர்.

இத்தகைய மஹான்களைப் பற்றிய நினைப்பினால் எத்தகைய மனிதனும் பரிசுத்தனாகிறான். அவன் இருக்குமிடமே கூட மிகவும் புண்ணியம் பெருக்கும் தூய்மையுடையதாகிறது. **'யேஷாம் ஸம்ஸ்மரணாத் பும்ஸாம் ஸத்ய: சுத்யந்தி வை க்ருஹா:'.** மேலும் மஹத்தான பெரிய பெரிய பாவங்கள் கூட அப்போதே நசித்து விடுகின்றன என்பதில் சந்தேகமுண்டோ! **'பாதகானி மஹான்யபி ஸத்யோ நச்யந்தி வை'.** அத்வைத ஆசார்ய பரம்பரையில் தனக்கென ஒரு தனி இடத்தையும் பெருமையையும் பெற்றவர் சுகாச்சாரியர். இவரைத் தொடர்ந்து ஒன்பதாவது ஆசார்யராக வருபவர் ஸ்ரீ கௌடபாதாசாரியர்.

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# குரு பாதுகா பஞ்சரத்னம்

जगज्जनिस्थेम लय अलयाभ्याम् अगण्य पुन्योदय भाविताभ्याम् ।
त्रयी शिरोजात निवेदिताभ्याम् नमो नमः श्री गुरु पादुकाभ्याम् ।।

**ஜகஜ்ஜன்னிஸ்தேமலயல்யாப்யாம் அகண்ய புண்யோதய பாவிதாப்யாம் ।**
**த்ரயீ சிரோஜாத நிவேதிதாப்யாம் நமோ நம ; ஸ்ரீ குரு பாதுகாப்யாம் ॥ 1 ॥**

*ஸகல உலகங்களின் உத்பத்தி ஸ்திதி, லயம் இவைகளுக்குக் காரணங்களாயும், எல்லையில்லாமல் உள்ள புண்ய பரிபாகத்தின் மகிமையால் அடையக்கூடினவாயும், வேதங்களின் உச்சியான உபநிஷத்களால் மட்டும் அறியக்கூடியனவுமான ஸத் குருவின் பாதுகைகளை நமஸ்கரிப்போமாக.*

विपत्तमस्तोम विकर्तनाभ्याम् विशिष्ट सम्पत्ति विवर्धनाभ्याम् ।
नमज्जनाशेष विशेषताभ्याम् नमो नमः श्री गुरु पादुकाभ्याम् ।।

**விபத்தமஸ்தோம விகர்த்தனாப்யாம் விஸிஷ்ட ஸம்பத்தி விவர்தனாப்யாம் ।**
**நமஜ்ஜனாசேஷ விசேஷதாப்யாம் நமோ நம; ஸ்ரீ குரு பாதுகாப்யாம் ॥ 2 ॥**

*ஆபத்துகளாகிய இருள் கூட்டங்களைப் போக்குவதில் சூர்யனாயும், உயர்ந்த ஐஸ்வர்யங்களை மேன்மேலும் அளிப்பனவாயும், வணங்குபவர்களுக்கு எல்லையில்லா புருஷார்த்தங்களை தருபவனவாயும், உள்ள குருவின் பாதுகைகளை நமஸ்கரிப்போமாக.*

समस्तदुस्तर्क कलन्क पन्का अपनोदन प्रौड जलाशयाभ्याम् ।
निराश्रयाभ्याम् निखिलश्रयाभ्याम् नमो नमः श्री गुरु पादुकाभ्याम् ।।

**ஸமஸ்ததுஸ்தர்க கலங்க பங்காஅபனோதன ப்ரௌட ஜலாசயாப்யாம் ।**
**நிராஸ்ரயாப்யாம் நிகிலாஸ்ரயாப்யாம் நமோ நம; குரு பாதுகாப்யாம் ॥ 3 ॥**

*துஷ்ட காரணங்களால் தோஷ சேற்றைப் போக்கடிப்பதில் பெரிய ஜலப் பெருக்காயும்,தான் எதையும் சாராமல் மற்றவர்களாலே சார்ந்திருப்பதுமான குருவின் பாதுகைகளை நமஸ்கரிப்போமாக.*

तापत्रयादित्य करार्चितानाम् छायामयीभ्याम् अतिशीतलाभ्याम् ।
आपन्न सम्रक्षण दीक्षिताभ्याम् नमो नमः श्री गुरु पादुकाभ्याम् ।।

**தாபத்ரயாதித்ய கரார்சிதானாம் சாயாமயீப்யாம் அதி சீதலாப்யாம் ।**
**ஆபன்ன ஸம்ரக்ஷண தீக்ஷிதாப்யாம் நமோ நம; குரு பாதுகாப்யாம் ॥ 4 ॥**

*ஆதி ஆத்மிகம் ஆதி தைவிகம், ஆதி பௌதிகம் என்னும் மூன்று தாபங்களான ஸூர்ய கிரணங்களால் தகிக்கப்படும் ஸர்வ ஜீவராசிகளுக்கும் குளிர்ந்த நிழலை தருவதும் சரணமடைந்தவர்களை காப்பதில் முக்ய நோக்கமுடையதாயிருப்பதுமான குருவின் பாதுகைகளை நமஸ்கரிப்போமாக.*

यतो गिरो अप्राप्य धिया समस्ता ह्रिया निव्रुत्ताः सममेव नित्याः ।
ताभ्यम् अजेशाच्युत भाविताभ्याम् नमो नमः श्री गुरु पादुकाभ्याम् ।।

**யதோ கிரோ அப்ராப்ய தியா ஸமஸ்தா ஹ்ரியா நிவ்ருத்தா ஸமமேவ நித்யா: ।**
**தாப்யாம் அஜேஸாயுக்த பாவிதாப்யாம் நமமோ நம: ஸ்ரீ குரு பாதுகாப்யாம்நச**

*எந்த வாக்குகள் பாதுகைகளின் மகிமையை வர்ணிக்க முடியாமல் வெட்கத்துடன் திரும்புகின்றனவோ இத்தகையவையும் ப்ரும்மா, விஷ்ணு, ருத்ராதிகளால் கொண்டாடப் பெற்றவையுமான குருவின் பாதுகைகளை நமஸ்கரிப்போமாக.*

ये पादुकापन्जकम् आदरेण पटन्ति नित्यम् प्रयताः प्रभाते ।
तेषाम् ग्रुहे नित्य निवासनशीला श्रीदेशिकेन्द्रस्य कटाक्षलक्ष्मीः ।।

**யே பாதுகாபஞ்சகமாதரேண படந்தி நித்யம் ப்ரயதா : ப்ரபாதே**
**தேஷாம் க்ருஹே நித்ய நிவாஸன சீலா ஸ்ரீதேசிகேந்த்ரஸ்ய கடாக்ஷலக்ஷ்மீ: ॥**

*யார் இந்த பாதுகா பஞ்சகத்தை ஆர்வத்துடன் காலையில் படிக்கிறானோ அவருடைய இல்லத்தில் ஆசார்யனின் கடாக்ஷ லக்ஷ்மீ நித்யம் நிவாஸம் புரியும்.*

# சாணக்ய ஸுபாஷிதம்

தனம்

**வரம் வனம் வ்யாக்ர கஜஏந்த்ர சேவிதம் த்ருமாலயம் பத்ரபலாம்பு ஸேவனம்**

**த்ருனேஷு ஸய்யா சதஸீணேவல்கலம் ந பந்து மத்யே தன ஹீன ஜீவனம் ॥**

*புலி, சிங்க யானைகள் இருப்பதும், அடர்ந்த மரங்களை உடையதும், புற்களே படுக்கையாயும் மரவுரியே ஆடையாயும் உள்ள காடு உறவினர் நடுவில் நிர்தனமாயிருப்பதைக் காட்டிலும் சிறந்தது.*

பணமே உறவு

**த்யஜந்தி மித்ராணி தனைர் விஹீனம் தாராச்ச ப்ருத்யாச்ச சஹ்ருஜ்ஜனாச்ச**

**தம் அர்த்தவந்தம் புனாஅஸ்ரயந்தே ஹி அர்த்தோ ஹி லோகே புருஷஸ்ய பந்து:**

*தனம் இல்லாதவனை நண்பர்கள் விடுவர். மனைவி, சேவகர்கள், உறவினர் விடுவர். தனம் வந்தபின் கூடுவர். இந்த தனமே புருஷனின் பந்து.*

திருமகள் வருவாள்

**மூர்க்கா யத்ர ந பூஜ்யந்தே தான்யம் யத்ர ஸுஸன்சிதம்**

**தாம்பத்யே கலஹோ நாஸ்தி தத்ர ஸ்ரீ ஸ்வயமாகதா ॥**

*மூர்க்கர்கள் எங்கு பூஜிக்கப்படவில்லையோ, தானியங்கள் எங்கு ஸேமிக்கப்படுகிறதோ தம்பதிகளிடத்தில் மனத்தாங்கல் எங்கு இல்லையோ அங்கு திருமகள் தானே வருவாள்.*

திருமகள் ஓடுவாள்

**குசைலினம் தண்தமலோபதாரிணம் பஹ்வசினம் நிஷ்டுர பாஷிணம் ।**

**ஸூர்யோதயே சாஸ்தமிதே சயானம் விமுன்சதி ஸ்ரீர் யதி சக்ரபாணி: ॥**

*அழுக்கு ஆடை, ஊத்தை வாய், இஷ்ட போஜி, நிஷ்டுரமாக பேசுபவன் கதிரவன் எழும்போதும் மறையும்போதும் தூங்குபவன், அவன் விஷ்ணுவாக இருந்தாலும் அவனை விட்டு திருமகள் ஓடுவாள்.*

# ஆனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15-06-2023 | வியாழன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 29-06-2023 | வியாழன் | ஏகாதசி ; ஸ்வாதி வேத பாராயணம் |
| 30-06-2023 | வெள்ளி | சாதுர்மாஸ்யாரம்பம் ; த்வாதசி ; அனுஷம் தேர் |
| 01-07-2023 | சனி | அனுஷம் வேத பாராயணம் ; ப்ரதோஷ பூஜை |
| 02-07-2023 | ஞாயிறு | மூலம் தேர் ; பௌர்ணமி பூஜை |
| 03-07-2023 | திங்கள் | வ்யாஸ பூஜை ; மூலம் வேத பாராயணம் |
| 03-07-2023 | திங்கள் | மூலம் வேத பாராயணம் |
| 04-07-2023 | செவ்வாய் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 06-07-2023 | வியாழன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 13-07-2023 | வெள்ளி | ஏகாதசி |
| 14-07-2023 | சனி | த்வாதசி |
| 15-07-2023 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |

*16-06-2023; 23-05-2023; 30-05-2023 07-07-2023; 14-07-2023*
வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# தொல்காப்பியத்தில் அத்வைதம்

*வித்வான் A. R. மலையப்ப சாஸ்திரிகள், திருச்சிராப்பள்ளி*

*பழந்தமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்தில், பொருளதிகாரத்தில், புறத்திணையியலில் 21-வது சூத்திரமாகிய 'கூதிர் வேனில்' என்று தொடங்குஞ் சூத்திரத்தில்,*

***ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்***
***சொல்லிய வகையின், ஒன்றெடு புணர்ந்து***
***தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானும்***

*என்னும் வரிகள் காணப் பெறுகின்றன. 'பகைவர் நாணும்படியாக உயர்ந்தோரான் நன்கு மதித்தலைக் கருதி, இன்னது செய்யேனாயின், இன்னது செய்வலெனத் தான் கூறிய பகுதியிரண்டனுள் ஒன்றினோடே பொருந்திப் பல பிறப்பினும் பழகி வருகின்றன உயிரை அங்கியங் கடவுட்குக் கொடுத்த அவிப்பலியாலும்'' என்று நச்சினார்க்கினியர் இதற்குப் பொருள் கூறுகிறார்.*

*இத்தகைய வீரனுக்கு நூல்களில் நல்ல வழி கூறப்பட்டிருக்கிறது.*

**द्वाविमौ पुरुषौ लोके सूर्य मण्डलभेदिनौ ।**
**परिव्राड् योगयुक्तश्च रणेचाभिमुखो हतः ।।**

*என்று ஸ்மிருதி கூறுகிறது. 'போர்க்களத்தில் எதிரிகளை எதிர்த்து நின்று மாய்ந்தவனும், யோகாப்பியாசமுடைய துறவியும், சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு செல்வர்' என்பது இதன் பொருள்.*

*இந்த வகையில் உயிர் துறவாதார்க்குச் சிறப்பில்லாத வேறு வழி கூறப்பட்டிருக்கிறது.*

*இந்த ச்லோகத்தில் போர்வீரனோடு சந்யாசியும் சேர்த்துக் கூறப்படுவதையாதாரமாக வைத்துக் கொண்டு சந்யாசி பக்ஷத்தில் இந்த சூத்திரத்திற்கு ஞானத்திற்கு இடையூறு செய்யும் இந்த்ராதி தேவதைகள் நாணும்படி ஞானிகளான பெரியோர்களையடைந்து, அவர்கள் சொல்லிய உபதேச வகையினால் ஒன்றாகிய பரம்பொருளோடு ஒன்றுபட்டு,*

அநாதியான உயிரை அவியைப் போல அர்ப்பணம் செய்வதாலும்' என்றும் பெரியோர் பொருள் கூறுகின்றனர்.

எவ்வளவு ஆத்மாக்கள் தன்னோடு புணர்ந்தாலும் அவை புணர்ந்த பின்னரும் தன் ஒன்று என்னும் தன்மை மாறாத வஸ்துவே அத்வைத பிரும்மம். அதினால்தான் இதற்கு 'ஒன்று' அல்லது 'ஏகம்' என்று பெயர் அமைந்தது. இந்திராதி தேவதைகள் ஞானாப்பியாசம் செய்பவர்களுக்கு பகைவர் (அப்பிரியர்கள்) ஆகிறார்கள் என்பது பிருஹதாரண்யகோபனிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**'தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானும்'**

என்னும் அடியில் வரும் 'தொல்லுயிர், என்னும் சொல்லுக்கு பல பிறப்பினும் பழகிவருகின்ற பல உயிரை' என்று உரை செய்கிறார் நச்சினார்க்கினியர். அவ் 'வுயிரை அங்கியங் கடவுட்கு அவிப்பலியாக கொடுத்தார்' என்கிறார்.

அக்னிக்கு பலியாக உடலை கொடுக்கலாமேயன்றி பல பிறப்பினும் பழகிவருகின்ற ஆத்மாவை பலிகொடுக்க முடியாது. ஆதலால் பகவத்கீதையில் சொல்லப்படும் **'ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவி : ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணாஹுதம்'** என்றபடி தன் ஜீவாத்மாவை தன்னைவிட வேறல்லாத ஒன்றான ப்ரஹ்மஸ்வரூப மென்னும் அக்னியில் அவிப்பலியாக கொடுத்தல் என்னும் பொருளே இங்கு அதிக பொருத்தமாயுள்ளது. உலக வகையில் இரண்டாவதோடு சேருதலே புணருதலாகும். அத்வைத ஞானமார்க்க மொன்றிலேயே **'ஒன்றோடு புணருதல்'** பொருளுடையதாகும். ஆகையால் முன்கூறிய ஸ்மிருதி வாக்கியத்தில் **'பரிவ்ராட்யோக யுக்தஸ்ச'** என்னும் அடியிலுள்ள ஆத்ம ஞானியின் பக்ஷத்திலேயே இத்தொல்காப்பிய சூத்திரம் அதிகப் பொருத்தமுடையதாயிருக்கிறது. அன்றியும் அச் சூத்திரத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ள **'காமநீத்த பாலினாலும்'** என்பதையும் திருக்குறளில் கூறப்பட்ட **'ஆராவியற்கை யவா நீப்பின்'** என்பதையும் ஒத்துப்பார்த்தால் முன்னர் அடியும் ஜீவன் முக்தியைத்தான் கூறுகின்றதோ என எண்ண இடமிருக்கின்றது.

தொல்காப்பியர் பொருளதிகாரத்து அகத்திணையில் 26-ம் சூத்திரத்தில் **'ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன'** என்றார். இங்கு, முற்கூறிய இரண்டனுள் முதலாவதாகிய **'ஓதல்'** என்பதை விளக்குவதற்காக வேண்டி கல்வி யாண்டு மூன்றிறவாது (தொல்.பொருள். கற்பியல் 47) என்ற சூத்திரத்தையும் அருளியிருக்கிறார்.

**'கல்வி'**- துறவறத்தினைக் கூறும் வேதாந்தம் முதலிய கல்வி; மூன்று இறவாது - அக் கல்வியெல்லாம், மூன்று பதத்தைக் கடவாமல், மூன்று பதமாவன :- அது வென்றும், நீயென்றும், ஆனாயென்றும் கூறும் பதங்களாகும்; அவை ப்ரமும், சீவனும், அவ்விரண்டும் ஒன்றாதலும் ஆதலின், இம் மூன்று பதத்தின் கண்ணே தத்வங்களைக் கடந்த பொருளையுணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்து கொள்க என நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றமையாலும் அது நீ ஆனாய் என்பது அத்வைத மஹா வாக்கியமாதலாலும் மேற்கண்ட கற்பியற் சூத்திரத்திலே அத்வைத ஸித்தாந்தம் அமைந்திருக்கிறது என்பது நச்சினார்க்கினியரது கொள்கை என்பது வெளிப்படை. **தஸ்மாத் அஹம்ப்ரஹ்மாஸ்மி இதி ஏத்தவஸானா சர்வே வித்யா : சர்வாணிச இதராணி பிரமாணானி** ஸ்ரீ சங்கர பகவத் பாதபாஷ்ய வாக்கியம். இக் கருத்தைக் கொண்டே நச்சினார்க்கினியரும் எல்லாவித்யைகளும் பிரும்ம வித்யையாலேயே பூர்த்தியடைகின்றன என்னும் தத்வத்தை ஈண்டு உரையில் விளக்குகிறார்.

**'நூலே கரகம் முக்கோல் மனையே யாயுங் காலை யந்தணர்க் குரிய '** (தொல். பொருள் மரபியல் 70) என்பது சூத்திரம்.

இதற்கு, 'முந்நூலும், குண்டிகையும், முக்கோலும் யாமை மனையும் போல்வன அந்தணர்க்கு உரிய' என்பது பொருள்.

அந்தணர்க்குரிய இலக்கணம் கூறவந்த இந்தச் சூத்திரத்தில் 'முக்கோல்' என்று கூறப்படுகிறது. 'அரி, அயன், அரன் என்னும் தெய்வங்களுக்குள் வேற்றுமையில்லை; மூன்றும் ஒன்றே என்பதற்கு அடையாளமாகத் தான் முக்கோல்' என்னும் 'திரி தண்டம்' கூறப்பட்டிருக்கிறது என்று பெரியோர் கூறுவர்.

கலித்தொகையின் உரையிலும், நச்சினார்க்கினியர் இந்தக் கருத்தை விளக்கி யிருக்கிறார். உறியிலே தங்கிய கமண்டலத்தையும், அரி, அயன், அரன் என்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும், முறைமைப் படத் தோளிலே வைத்து, எறித்தலைச் செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையினாலே எடுக்கப்பட்ட குடை நிழலிலே.... அரி, அயன், அரன் என்னும் மூவரையும் ஒருவனாக வல்லது வேறாக நினையாத நெஞ்சத்தாலே, ஐம்பொறியும் நுமக்கு ஏவல் செய்தலை இயல்பாக வுடைய கோட்பாட்டையும், உமக்குரிய

ஒழுக்கத்தையும் உடைய அந்தணர்' (கலித். 9 உரை) என்பது அவ்வுரைப் பகுதி.

**'மூவிலை யொருதாட் சூல மேந்துதல்**
**மூவரும் யானென மொழிந்த வாறே.'**

(திருவொற்றியூரொருபா வொருபது, 6)

(மூவிலையும், ஒரு தண்டுமுடைய திரி சூலத்தை ஈசன் ஏந்தி யிருப்பது மும்மூர்த்திகளும் யானே என்று விளக்குவதற்கே) என்னும் பட்டினத்தார் பாடலும் இங்கு நினைவிற்கு வருகிறது.

இவ்வாறு மும்மூர்த்திகளுள்ளும் அபேதங் காண்பது அத் வைத மதத்திற்கே அமைந்த சிறந்ததொரு கொள்கை. இந்த 'முக்கோல்' என்ற சொல்லை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஆராயும்போது, முற்காலத்திலிருந்த பிராம்மணர்களனைவரும் அத்வைத வேதாந்திகளாகவே இருந்தனர் என்பது நன்கு விளங்குகிறது.

**தொல்காப்பியம், மரபியலில்:-**

**'நிலந்தீ நீர்வெளி விசும்போ டைந்துங்**
**கலந்த மயக்க முலக மாதலின்**
**இருதிணை யைம்பா லியனெறி வாழ அமைத்**
**திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்.'**

என்ற சூத்திரத்திற்கு,

'நிலனும், தீயும், நீரும், காற்றும், ஆகாயமுமென்னும் ஐம் பெரும் பூதமுங் கலந்த கலவை யல்லது உலகமென்பது பிறிதில்லாமையின் அவற்றைச் சொல்லுமாறு சொல்லாது இருதிணைப் பொருளென வேறுபடுத்து வழங்குகின்ற வழக்கெல்லாம், மர பில் திரியாத சொல்லோடு தழீஇ வரல் வேண்டும்' என்பது பொருள்.

'கடம் முதலான (காரிய) பதார்த்தங்கள், நாம ரூபங்களால் வேறாகச் சொல்லப்பட்டாலும். அவை (காரணமாகிய) மண்ணென்பதே உண்மை' என்பது சாந்தோக்ய உபநிஷத்தின் வாக்கியம்.

ஐம்பெரும் பூதங்களின் கலவை யல்லது உலகமென்பது பிறிதில்லாமையின் என்னும் வாக்யம் சாந்தோக்கிய வாக்கியத் திற்கு ஒத்திருக்கிறது. உலகத்தில் காணப்படும்

*எல்லாப் பொருள்களும் ஐம்பெரும் பூதங்களைத்தவிற வேறல்ல வானாலும் உலக வியவகாரத்தில் (மரபில்) எதெது எவ்வெப் பெயரால் வழங்கவேண்டும் என்றும் கொள்கையைப் பின்பற்றித்தான் நிலத் தீவெளி என்னும் இத்தொல்காப்பிய சூத்திரம் மரபிய லில் அமைக்கப்பட்டிருக்கிறது.*

*சாந்தோக்ய உபனிடதத்தில் மண் என்பதே உண்மை என்னும் உவமையைக் கொண்டு உலகத்திலுள்ள எல்லா பொருள்களுக்கும் பரமகாரணமான பரம்பொருளே உண்மையென்னும் தத்வம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இப்பேருண்மையை ஸ்தாபிப்பதற்கு உவமை வகையில் இந் 'நிலந்தீநீர்வெளி' யென்றும் தொல்காப்பிய மரபியல் சூத்திரமும் உபயோகப்படலாம்.*

*இவ்வுபமான உபமேயங்களை கம்பராமாயணம் சுந்தர காண்டம் காப்புச் செய்யுளும் விளக்குவது இங்கு நோக்கற்பாலது.*

**அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவெனப் பூதமைந்தும்**
**விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்**
**கலங்குவ தெவரைக் கண்டால் அவரென்பர் கைவிலேந்தி**
**இலங்கையில் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதியாவார்.**

*-சுந்தர காண்டம், கடறாவு படலம் 1.*

*இச்சூத்திரத்தின் பொருளை அனுசரித்து ஸ்ரீ ஆதிசங்கரா சார்ய சுவாமிகள் ப்ரம்ம சூத்ர பாஷ்யத்தில் 4-வது அதிகரணத் தில் (1-1-4) ஸ்ரீ ஆசார்யரவர்களுக்கு முற்பட்ட ஆசார்ய சுந்தர பாண்டியன் என்னும் மகானுடைய* **'லௌகிகம் - தத்வத் - ஏவ - இதம் - ப்ரமாணம் - து - ஆத்ம நிச்சயே** *என்னும் வாக்கியம் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது இதன் கருத்து உலகமெலாம் உண்மையில் பரம்பொருளேயானாலும் அவ்வித நிச்சய அனுபவம் வரும்வரையில் மரபை அனுசரித்த வ்யவஹாரங்களெல்லாம் ப்ரமாணமாகவே கொள்ள வேண்டும்.*

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**॥ ஓம் ப்ராணதத்வவிதே வேதாந்தபாஸ்கராய நம: ॥**

**ப்ராணோபாஸனநிஷ்டானாம் ஸர்வதா விஜயோ பவேத்**

**நாஸ்தி தேஷாம் பயம் கேப்யோ நூனம் வேதாந்தபாஸ்கர: !!**

பிராணனை உபாஸனை செய்து நிஷ்டரானவர்களுக்கு எல்லா இடத்திலும் வெற்றியே. எவராலும் அவர்களுக்குப் பயம் கிடையாது.

## 9. பிராணோபாஸனையின் மகிமை !

**யதா அச்மானம் ஆகணம் ருத்வா வித்வம்ஸதே, ஏவம் ஹைவ ஸ வித்வம்ஸதே ய ஏவம்விதி பாபம் காமயதே, யச்ச ஏனமபிதாஸதி, ஸ ஏஷ: அச்மாகண: ॥**

**சாந்தோக்யோபநிஷத் 1-2-8**

***ஒருவன் பெரிய பாறையைக் கையினால் உடைத்துப் பொடி செய்ய முயற்சித்தால், அவனுடைய கைகளே உடைகிறது. இதே போல் பிராணோபாஸனை செய்பவர்களை அழிக்க நினைப்பவன் தானே அழிந்து போகிறான். பிராணோ பாஸகன் பாறையைப் போன்று உறுதியானவன்.***

உபாஸகர்கள் இஷ்ட தேவதைகளை உபாசனை செய்து அந்தந்த தேவதைகளின் அனுக்கிரகத்தைப் பெற்றுள்ளார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, அருளல் மற்றும் சபிக்கும் சாமர்த்தியமும், திவ்யமான சக்தியும் உண்டாகின்றன.

செல்வம், அதிகாரம், கல்வி போன்றவைகளால் ஒருவன் சாமான்ய ஜனங்களை அடக்கி ஆளமுடியும். ஆனால் அவனால் ஒரு பிராணோபாசகனையோ, ஒரு தேவதா உபாசகனையோ அடக்க முடியாது. ஏனென்றால் பிராணோபாசனையின் மகிமை எல்லா செல்வங்களுக்கும் மேலானது. இந்த உபாசனைகளினால் சகல சம்பத்துக்களும் கிடைக்கும். ஆனால் அவை யாவும் முக்தி ஆகாது.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**॥ ஓம் ப்ரஜாபதிதத்த்வவிதே வேதாந்தபாஸ்கராய நம : ॥**

**ஸ்ருஷ்டே: பூர்வம் ஜகத் ஸர்வம் விராடேவ சராசரம் ।**

**புருஷஸ்து ஸ ஏவாத்ய ஜீவோ வேதாந்தபாஸ்கர: ॥**

சிருஷ்டிக்கு முன் இந்த சராசராத்மகமான உலகம் முழுவதும், விராட புருஷனாகவே இருந்தது. அவனே இப்பொழுது ஜீவ ரூபத்தில் காணப்படுகிறான்.

## 10. விராட புருஷனின் மகிமை

**ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் புருஷவித: ॥**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 1-4-1**

***இது முதலில் புருஷவிதன் என்கிற ஆத்மாவே ஆகியிருந்தது.***

இங்கே ஆத்மா என்றால், ப்ராஜாபதி என்கிற பிரம்மன். இவன் தான் புருஷவிதன். இப்பொழுது நாமரூபங்களினால், கூறுகளாகக் காணப்படக் கூடிய இவ்வுலகம் முழுவதும் ச்ருஷ்டிக்கு முன்னால் ஆத்மாவாகவே இருந்தது. இந்த ஆத்மாதான் விராட புருஷன். இவன் தான் ஹிரண்ய கர்ப்பனும் ஆகிறான்.

புருஷவிதன் என்றால் தலை, கை, கால், கண், காது முதலியவற்றோடு, சூட்சும ரூபத்தில் இருக்கக் கூடியவன். இவனிடமிருந்தே சகல புருஷர்களும் பிறக்கின்றார்கள். இவன் தன்னைத் தவிர மற்றொன்று இல்லை என்றும், தன்னை 'அஹம்' என்றும் தெரிந்து கொண்டதால் இவன் **அஹம் நாமா அபவத்** (அஹம் எனப்படுகிறான்).

சிருஷ்டிக்கு முன் உண்மையில் இருந்தது ஆத்மாவே தான். ஆகவே இந்த பிரஜாபதி ரூபத்தில் இருப்பவனும் ஆத்மாவே தான். அதனால் இங்கு ஆத்மா என்றாலும் பிர ஜாபதியைத் தான் குறிக்கும். அவனுக்கே அவ்யாகிருத ஆத்மா என்றும் பெயர்.

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

பௌராணிகர் சிஷ்யனிடம் இது வரை அற்புதங்கள் நிறைந்த பல புராணங்களைப் பார்த்தோம். இன்று சைவ நாயன்மார்களில் சிறப்பாக இருக்கும் ஒரு நாயனாரின் கதையை சொல்லப் போகிறேன். இதில் கதை அம்சம் குறைவு. தத்வ அம்சம் அதிகம். சிவனாரின் பெரும் காப்பாளராக இருப்பவர் நந்திதேவர். இவருக்கு சீடராய் ஒரு சிவ யோகி இருந்தார். அவரை நாதர் அப்படீன்னு கூறுவர். இந்த யோகி அஷ்டமா சித்திகளை கைவரப் பெற்றவர். அகத்தியரைக் காண கையிலையிலிருந்து பொதிகை நோக்கி வந்தார். வழியில் சில சிவஸ்தலங்களைப் பணிந்து ஆடுதுறைக்கு வந்து அங்கு தங்க எண்ணினார். அதே சமயத்தில் மூலன் என்னும் இடையன் பசுக்களை ஓட்டி வந்து மேய விட்டான். இது அவன் வழக்கமாகச் செய்யும் செயல். அன்று திடீரென்று அவன் இறந்தான். பசுக்கள் அவன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்தன. கதறின. சிவயோகியார் இதைப் பார்த்தார். பசுக்களின் துயர் தீர்க்க எண்ணினார். மூலன் உயிர் பெற்றாலொழிய இவைகளின் துயர் நீங்காது என்று எண்ணி தனக்குத் தெரிந்த கூடுவிட்டு கூடு பாயும் வித்தையினால் மூலன் உடலில் புகுந்தார். மூலன் உயிர் பெற்றதும் ஆவினங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தன. தன்னுடலை பாதுகாப்பாக வைத்தார். பசுக்கள் மேய்ச்சலை முடித்தவுடன் தம் தம் குடில்களுக்குச் சென்றன.

தன் வீடு சென்றதும் மூலனின் மனைவி அவன் ஒதுங்கிப் போவதைப்பார்த்து அவனைத் தொடச் சென்றாள். அவரோ ‘உனக்கும் எனக்கும் தொடர்பு இல்லை’ என்று கூறி தான் மறைத்து வைத்த மூலன் உடலைத் தேடினார். அங்கு அது இல்லை. தெளிவு பெற்றார். திருமூலராக இருந்து தமிழ் ஆகமம் செய்ய இறைவனின் ஆணை என்று எண்ணி ஆவடுதுறை சென்று சிவ யோகத்தில் ஒன்றி மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்து ஆண்டுக்கு ஒரு பா என்று மூவாயிரம் பாடல்களை அருளினார்.

திருமூலர் என்னும் நாமத்தால் இன்னிக்கும் போற்றப்படுகிறார். இது கதை. தத்வம் பற்றி கொஞ்சம் பார்க்கலாம். இவரது பாடல்கள் எளிமையானவை. தோத்திரமாயும், சைவ சாத்திரமாயும் போற்றப்படுகின்றன. எல்லோருக்கும் சில பாடல்கள் தெரியும். அவை தவிர சைவ சித்தாந்ததின் **சரியா பாதம் க்ரிய பாதம் யோக பாதம் ஞான பாதம்** இவைகளை மூவாயிரம் பாடல்களில் தந்திருப்பது சிறப்பு. இதோ சில.

**ஹரி ஹர ப்ரம்மா ஒருவரே**

ஒருவனுமே உலகேழும் படைத்தான்
ஒருவனுமே உலகேழும் அளந்தான்
ஒருவனுமே உலகேழும் கடந்தான்
ஒருவனுமே உடலோடு உயிர் தானே

**பேதமில்லை பல இல்லை இருப்பது ஒன்றே**

மண்ணொன்றுதான் பல நற்கலம் ஆயிடும்
உண்ணின்ற யோனிகள் எல்லாம் இறைவனே
கண்ணொன்றுதான் பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகி நின்றானே

**பரோபகாரம்**

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் வைரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே

**செய்ய வேண்டிய அறம்**

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கும்மாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் பிறர்க்கு இன்னுரைதானே.

மகாபெரியவாளின் பிடி அரிசி திட்டத்தை நினைத்துக் கொள்ளவும்


**பராசக்தி வணக்கம்**

அவளை அறியா அமார்ருமில்லை
அவளன்றி செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றுமில்லை
அவளன்றி ஊர் புகும் ஆறு அறியேனே

இங்கு சொன்னவை சில மாதிரிகள் தான். மூர்த்தி சிறியது கீர்த்தி பெரியது என்று சொல்வார்கள். திருமூலரின் கதை சிறியதுதான். அவர் தந்த மூவாயிரம் பாடல்கள் தமிழுக்கு அவர் தந்த கொடை. ஒரு முறை வாசித்தால் புரியும் என்று கூறி ஓய்ந்தார்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

தேவார டாக்டர் ரா. சுப்ரமணியம்



ஒரு மாதம் சென்றது. பெரியவரிடம் நான் மறுதினம் ஊருக்குப் போவதாகச் சொன்னேன். காலையில் நான் ஆற்றுக்குப் போகும் வழியில் பெரியவர்களின் கொட்டகையைத் தாண்டிச் செல்லும் போது அவர்கள் தன் அணுக்கத் தொண்டரிடம் 'இந்த கோயம்பத்தூர் டாக்டருக்கு தேவாரத்தில் நல்ல ஈடுபாடு, அதி புத்திசாலி, இன்னிக்கி ஊருக்குப் போறேங்க்றான். அப்புறம் யார்கிட்ட தேவாரம் படிக்கச் சொல்லப் போறேன்' என்று சொல்லிக் கொண்டது என் காதில் விழுந்தது.

ஒரு தாய் தன் குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்வதுபோல் அவருடைய சொற்களில் அன்பை உணர்ந்தேன். கண்ணீர் மல்கினேன்.

'திருவடி நேறென்னைப் பூசு' என்று அப்பர் பாடியபடி ஸ்ரீ பெரியவரின் திருவடி மண்ணை ஒரு சிறிய டப்பாவில் எடுத்து அடைத்து வைத்தேன். பின்பு அந்த புனித நாட்களை நினைவில் கொண்டு திருமுறை பதிகங்களைப் பாடி தல யாத்ரை செய்தேன். பத்து மாதங்கள் கழிந்தன.

*ஸ்ரீ ஸ்வாமிகள் பெல்காம் நகரில் சாதுர்மாஸ்யம் அனுஷ்டித்து வந்தார். இசையுடன் தேவாரம் பாடக் கற்றுக் கொண்டதையும் தல யத்ரை செய்ததையும் கூறினேன். என்னைப் பாடும்படி உத்தரவிட்டார்கள். ஆரம்பித்தவுடன் நிறுத்து என்று சைகை செய்தார்கள். பின்பு 'உனக்கு வலிவலம் பாட்டு தெரியுமா?' என்றார்கள். நான் முழித்தேன். திருஞான ஸம்பந்தர் பதிகம் என்றார்கள். புரியவில்லை. பின்பு சிரித்து 'பிடியதன் உருவுமை' என்று எடுத்துக் கொடுத்தார்கள்.*

*வினாயகரை மறந்து பாடியதை சுட்டிக்காட்டினார்கள். மாலை 3 மணி நேரம் பாடியவற்றைக் கேட்டு மகிழ்ந்தார். அப்போது பான்யம் சிமென்ட் ஆலை அதிகாரிகள் அங்கு வந்து அவர்கள் கட்டிய சிவாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்வதாயும் அதற்கு மடத்து வேத விற்பன்னர்கள் வர வேண்டும் என்றும் விண்ணப்பித்து அவரது ஆசியும் கோரினர். அப்போது பெரியவர்கள் கோவில்களில் நித்ய பூஜைக்குப் பின் த்ராவிட வேதம் ஓதும் வழக்கம் உண்டோ.*

*இங்கு யார் இருக்கா? இதோ இவரை மடத்தின் சார்பில் கூட்டிண்டு போங்கோ என்று ஆணையிட்டார்கள். நான் பயந்து தாளம் இல்லையே என்றேன். ஞான சம்பந்தருக்கு பொற் தாளம் தந்து ஓசை நாயகி என்று அம்பாள் பெயர் பெற்றாள்.' என்று கூறி இரண்டு தாளங்களை வரவழைத்துத் தந்தார்கள். நானும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு மறைகளை ஓதி விட்டு பெல்காம் திரும்பிய என்னை விவரமாக விசாரித்தார்கள்.*

*மறுதினம் மூலையில் நின்று கொண்டிருந்த என்னை அழைத்து திருமுறைப் புத்தகம் தந்து படிக்கச் சொன்னார். அது முதல் தினமும் பாராயணம் செய்து வருகிறேன். 35 நாட்கள் அங்கு தங்கி திருமுறை பாராயணம் செய்தேன். நான் செய்த பாக்யம் அவர் என்னை இதற்குத் தேர்ந்தெடுத்ததே.*

*குருவின் சரணத்தை தினமும் வணங்குகிறேன். வாழ்க! அவர் புகழ்!*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**



துர்யோதனனுக்கும் பீமனுக்கும் நடந்த கடுமையான கதா யுத்ததில் துடைகள் பிளக்கப்பட்டு துர்யோதனன் கீழே விழ பீமன் வெற்றிக் களிப்பில் கோஷமிட்டான். தன் சீடன் துர்யோதனன் துடைகள் பிளக்கப்பட்டு வீழ்ந்தது கண்டு கோபம் கொண்டார் பல ராமர். ''சீ சீ பீமா இது ந்யாயமல்ல. இது நான் உனக்குச் சொல்லித் தந்த பாடமும் அல்ல. சரி சமானமான யுத்தத்தில் நாபிக்குக்கீழே அடிப்பது தர்மமன்று. இதற்குறிய பலனை நீ அனுபவிப்பாய்'' என்று ஆக்ரோஷமாய்க் கத்த க்ருஷ்ணர் 'அண்ணா! பீமன் துர்யோதனனின் தொடைகளைப் பிளப்பேன் என்று சபதம் எடுத்துள்ளான் அதை நிறைவேற்றியதால் அது அதர்மமாகாது. பாண்டவர்கள் நம்

மித்ரர்கள். அவர்கள் துர்யோதனனால் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். வஞ்சனைக்கு வஞ்சனையே ப்ரதி. மேலும் நீ தொடைகள் பிளந்து சாவாய் என்று துர்யோதனனுக்கு மைத்ரேயர் சாபமிட்டுள்ளார். மேலும் அவன் பூமியில் இருந்தபோது அடிக்கப்படவில்லை. மேலே எழும்பியபோது அடிக்கப்பட்டான். அதனால் அது அதர்மமில்லை என்று சமாதானப்படுத்தினார். ஆனால் அவர் சமாதானமாகவில்லை .

பின்பு ஓகவதி நதிக் கரையிலிருந்து க்ருஷ்ணர் பரிவாரங்களுடன் த்ருத்ராஷ்டிரனையும் காந்தாரியையும் காண வந்தார். க்ருஷ்ணர் 'அரசே! நித்யம் உன்னிடம் யுத்தம் வேண்டாம் என்று ப்ரார்த்திக்கப்பட்டது. ஆனால் நீயோ சமாதானப் பேச்சுக்கே வரவில்லை. ஓரணு அளவு கூட பாண்டவர்கள் தரப்பில் விதி மீறலில்லை. உன் பாரம்பர்யமும் பித்ருக்களின் ஆராதனமும் பாண்டவர்களின் கையில் தான் உள்ளது. அவர்களை நட்போடு பார். உனக்கு வணக்கங்கள்.'

பின்பு அவர் சோகத்தினால் பீடிக்கப்பட்ட காந்தாரியிடம் 'அம்மணி! தர்மம் சார்ந்த மொழிகளை உள்ளன்போடு உன் புத்ரர்களுக்குக் கூறினாய்.அவர்கள் அதை எற்கவில்லை. ஜயம் ஜயம் என்று கோஷமிட்டுக் கொண்டிருந்த உன் புத்ரன் துர்யோதனனிடம் ''ஹே மூடனே! எங்கு தர்மமோ அங்குதான் ஜயம் என்று தெரிந்து கொள் என்று இடித்துரைத்தாய். இன்று அது உண்மையாகிவிட்டது. கல்யாணி! மனதைத் தேற்றிக்கொள் என்று கூறினார்.

பின்பு அவர்களை தேற்றரவு செய்துவிட்டு க்ருஷ்ணர் பாண்டவர்களிடம் வந்தார். இதனிடையில் அஸ்வத்தாமனும் க்ருபரும் க்ருதவர்மரும் மரணப் படுக்கையில் இருந்த துர்யோதனனைப் பார்த்தனர். அவனது நிலையைப் பார்த்த அஸ்வத்தாமன் அரசே ''இன்றிரவு அனைத்துப் பாண்டவர்களையும் கொல்வேன்'' என்று சபதம் செய்தான். அஸ்வத்தாமனைன் சபததைக் கேட்ட துர்யோதனன் மகிழ்ச்சி அடைந்தான். அவனது ஆணையின்படி க்ருபர் அஸ்வத்தாமனை தளபதியாக்கினார்.

சல்ய பர்வம் முற்றும்

# சிவமானஸிக பூஜை

ஸதாசிவ ப்ரம்மேந்திரர் அருளியது

எங்கும் இருக்கும் பரமாத்வான சிவனை ஒரு ரூபத்தில் எப்படி பூஜிப்பது என்ற திகைப்பில் எழுந்த ஸ்லோகங்கள் ப்ரம்ம ஞானியான ப்ரம்மேந்த்ரர் தன் அனுபூதியில் அருளியது



अकरविराजत्सुम्रुगैरवृषतुरन्गैरमौलिध्रुतगन्गै:
अक्रुतमनोभवबन्गैर्जगति देवतापशदै: ।। २६

அகரவிராஜத்ஸம்ருகைரவ்ருஷதுரங்கைரமௌலித்ருத கங்கை:
அக்ருதமனோபவபங்கைரலம்ன்யைர்ஜகதி தைவதாபசதை: ॥ 26 ॥

कस्मै वच्मि दशाम् मे कस्ये द्रुक्ह्रदयमस्ति शर्क्ति वा
कस्य बलम् स उद्दर्थुम् क्लेशाम् त्वामन्तरा दयासिन्धो ।। २७ ।।

கஸ்மை வச்மி தசாம் மே கஸ்யேத்ருக்ஹ்ருதயமஸ்தி சக்திர் வா
கஸ்ய பலம் ச உத்தர்த்தும் க்லேசாத் த்வாமந்தரா தயாஸிந்தோ ॥ 27।

*தயா ஸமுதர்மாயிருப்பவனே உனைத் தவிர்த்து யாரிடம் என் கஷ்ட தசையை சொல்வேன். யாருக்கு இதயமோ சக்தியோ உண்டு? உன்னைத் தவிர துன்பத்தினின்று கை தூக்கி விடுவதற்கு யாருக்கு பலமுண்டு ?*

याचे ह्यभिनवम् ते चन्द्रकलोत्तम्स किन्जितपि वस्तु
मह्यम् प्रदेहि भगवनम् मदीयमेव स्वरूपानन्दम् ।। २८ ।।

யாசே ஹ்யபினவம் தே சந்த்ரக்லோத்தம்ஸ கிஞ்சிதபி வஸ்து
மஹ்யம் ப்ரதேஹி பகவன் மதீயமேவ ஸ்வரூபானந்தம் ॥ 28 ॥

*சந்த்ரசூடனே ! பழைய பொருள் ஒன்றையே உன்னிடம் யாசிக்கிறேன் பகவானே! என்னுடைய ஆனந்த ஸ்வரூபத்தை எனக்குக் கொடு.*

भगवन् बालथया वा अभक्त्या वा अप्यपदाकुलतया वा
मोहविष्टतया वा मा अस्तु च मे मनसि यत् दुरुक्तम् मे ।। २९ ।।

பகவன் பாலதயா வா அபக்தயா வா அப்யாபதாகுலதயா வா
மோஹவிஷ்டதயா வா மா அஸ்து ச மே மனஸி யத்துருக்தம் மே ॥ 29 ॥

*பகவன் ! சிறு பிள்ளைத்தனத்தாலோ, பக்தி இல்லாததாலோ, ஆபத்துகளால் மனம் கலங்கியதாலோ மோஹத்தினாலோ என்னால் செய்யப்பட்ட புன் சொல்லானது உன்னுடைய மனதில் இல்லாமல் போகட்டும்.*

यदि विश्वाधिकता ते यदि निगमागमपुराण याथार्थ्यम्
यदि वा भक्तेषु दया यदिह महेशाशु पूर्णकाम: स्याम् ।। ३० ।।

யதி விஸ்வாதிகயா தே யதி நிகமாகமபுராண யாதார்த்யம்
யதி வா பக்தேஷு தயா யதிஹ மஹேசாசு பூர்ணகாம: ஸ்யாம் ॥ 30॥

*மஹேஸ்வரனே உனக்கு எல்லவற்றிற்கும் மேலான தன்மை உண்டென்றால் வேத ஆகம புராணங்கள் உண்மை என்றால் அல்லது பக்தர்களிடத்தில் தயை உண்டென்றால் இங்கே உடனடியாக விருப்பங்கள் முழுமையாக நிறைவேறினவனாக ஆவேன்.*

முற்றும்